# அண்ணாவின் அறிவுரைகள்

தொகுப்பு :

## தமிழ்ப்பித்தன்

அன்பு நிலையம்
131. பிராட்வே. சென்னை-1

முதற் பதிப்பு : மே 1967

தயாரிப்பு :
K. R. நாராயணன்

விலை ரூ. 1—50

பாரி அச்சகம், 127, பிராட்வே, சென்னை-1.

# முன்னுரை

தமிழக முதலமைச்சர்—தமிழர் வாழ்வைத் தரணியி உயர்த்திவைத்துள்ள செந்தமிழ் மன்னர்—நமது இதயத்தி உதய ஞாயிறு—இயக்கத்தின் இணையிலாத் தலைவர் அறிந அண்ணா அவர்கள் சாதாரண எழுத்தாளர் அல்ல—தத்துவ சுரங்கம்.

தங்கச் சுரங்கத்தில் கூட தங்கம் தீர்ந்துவிடும். சேர்த்து வைத்திருக்கின்ற அணையில் கூடத் தண்ணீர் குறைந்துவிடும். ஆனால் அறிஞரின் கருத்துச் சுரங்கங்கள் ஒரு நாளும் குறைவதில்லை—மறைவதில்லை. அவரது இதயம் மணிமேகலையின் கையில் இருந்த அட்சய பாத்திரத்துக்குச் சமம். அதில் உள்ள கருத்துச் சோறு அள்ள அள்ள அதிகரிக்குமே தவிர, குறைவதில்லை.

தென்னகத்து வாழ்விலே புதிய மாற்றத்தைச் செய்த அந்தப் புண்ணியரின் சிந்தனை தேங்கிக் கிடந்ததில்லை வானமெனப் பரவியிருக்கிறது. கானமென மகிழ்வூட்டி வருகிறது.

ஆழ்கடலின் முத்துக்கள் கூட ஒளி இழக்கலாம். ஆனால் அறிஞரின் கருத்து முத்துக்கள் நாளுக்கு நாள் ஒளி வீசி வருகிறது. அதி சீதச் சந்தனம் கூட தரத்தை இழக்கலாம். ஆனால் அறிஞர் சொல்லோவியம் தரும் சுகம் குறைவதில்லை

ஆட்சிப் பொறுப்பேற்ற பின் அவர்தம் வாய்மொழியை அகில உலகமும் ஊன்றிக் கவனிப்பது குறிப்பிடத்தக்கது தி. மு. கழக ஆட்சி பற்றி நமது முதலமைச்சர் தந்திருக்கும் கருத்துப் படையல்கள் அனைவரும் நினைவில் வைக்கவேண்டிய அரசியல் சாசனங்கள் ஆகும். மாற்றுக் கட்சிக்காரர்களும் மனமுவந்து பாராட்டியிருக்கும் பண்பு நமது தலைவரின் தனிப் பெருங் குணம்.

தமிழ்வானத்திலே தாரகையாக மின்னிக்கொண்டிருக்கும் அவரது அறிவுரைகள் இந்நூலில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. தமிழினத்துக்குப் பயன்தரும் செயல் ஒன்றினைச் செய்த மன நிறைவு எனக்கு ஏற்படுகிறது.

அன்பன்,

**தமிழ்ப்பித்தன்**

# உள்ளே


1. நமது ஆட்சி
2. தி. மு. க.
3. கைத்தறி
4. மொழி
5. மதுவிலக்கு
6. சட்டம்
7. மக்கள்
8. கலை
9. நாடகம்
10. விஞ்ஞானம்
11. கல்வி
12. ஏடுகள்
13. அரசியல்
14. மறுமலர்ச்சி
15. மேடைப் பேச்சு
16. வாலிபர்கள்
17. பெண்கள்
18. காதல்
19. திருமணம்
20. மதம்
21. சாதி
22. மூட நம்பிக்கை
23. மாற்றுக் கட்சித் தலைவர்கள்
24. மே நாள்
25. ஏழை
26. முதலாளி
27. விவசாயம்
28. ரஷ்யா
29. ஓய்வு
30. நீதி
31. மனிதன்
32. பாட்டாளி
33. நடுத்தர மக்கள்
34. பன்மலர்ச்செண்டு

# நமது ஆட்சி

எங்களிடம் கொடுக்கப்பட்டு இருப்பது ஆட்சி என்ற புனிதமான சிலுவை. சிலுவையை இன்னலுக்கு இடையே சுமந்து ஏசுநாதர் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்ததைப் போல நாங்களும் இந்த ஆட்சி என்ற சிலுவையை என்ன கஷ்டங்கள் வந்தாலும் சுமந்து சென்று வளமான வாழ்வு என்ற இடத்தை அடைவோம்.

✱

நாம் ஆட்சிக்கு வந்தது பதவி ஆசையால் அல்ல. மக்களுக்கு நன்மை செய்யவே. பதுக்கல் காரர்களைப் பிடித்துச் சமூக விரோத சக்திகளை ஒடுக்கி மக்களுக்கு நன்மை செய்வதே நமது பணி. அதற்காகவே பதவிக்கு வந்திருக்கிறோம்.

✱

தமிழ் வெல்லும்—வென்று வருகிறது—வெல்லச் செய்வோம் என்ற உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் அளவுக்கு நாம் வளர்ந்து விடுவோமானால் உலகத்தில் எந்த நாட்டிலும் நம்மைவிட உயர்ந்தவர்கள் இருக்க முடியாது.

✱

தாய்மார்கள் சமைத்ததனால் அழுக்கேறிய பாத்திரங்களைத் துலக்காமல் மீண்டும் அடுப்பின் மேல் ஏற்ற மாட்டார்கள். அழுக்கை அகற்றிய பிறகு தான்

டாத்திரத்தை அடுப்பில் ஏற்றிச் சமைக்க ஆரம்பிப்பார்கள். அது போல் 20 ஆண்டுகளாக காங்கிரஸ்காரர்கள் ஏற்படுத்தி விட்டுப்போன அழுக்கைத் துலக்குகிறோம். அழுக்கை அகற்றியானதும் மக்களுக்கு ஆவன செய்யக் காத்துக் கிடக்கிறோம்.

தனக்குப் பார்த்த பெண்ணை அடுத்தவனுக்கு முடித்து வைத்து—அந்தத் திருமணமும் தன் கண்ணெதிரிலேயே நடக்கின்றபோது—மேள வாத்திய ஓசையைக் கேட்கின்றபோது—தனது தலையே வெடித்திடும் போல இருக்கும். 'போதும் நிறுத்துங்கள்' என்று கூறிடக் கூடத் தோன்றும். அதற்கே அப்படியென்றால் 20 ஆண்டுகள் சுவைத்த பதவியை விட்டு விடவும், அந்தப் பதவியில் எதிர்க்கட்சியான திமுகழகம் அமரவும் கண்டால் காங்கிரஸ்காரர்களுக்கு எப்படித்தான் மனம் அமைதி பெறும்?

கோபுரத்தைக் கட்டுவதற்காகக் கையிலே உள்ள பணத்துக்கு கலசம் மட்டும் வாங்கி வைத்துவிட்டால் பயன் போதாது! ஆனால் காங்கிரசுக் கட்சி கலசத்தை மட்டும் வாங்கி வைத்துவிட்டு அடித்தளத்தை எழுப்பாமல் விட்டு விட்டது. கட்டிடங்களைக் கட்டி விட்டதும் திட்டம் வெற்றி பெற்று விட்டதாக நினைத்து விட்டார்கள். "இதோ எல். ஐ. சி மாளிகை பார்—அசோகா ஓட்டல் பார்" என்று கட்டிடங்களைக் காண்பித்து விடுவதால் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியதாகி விடாது! முதலில் இந்த நாட்டு மக்களின் கண்ணீர் துடைக்கப்

பட வேண்டும்—எங்கள் அரசு அதில் தான் கவனம் செலுத்தும்.

❊

நாம் இல்லாததைப் பெற்றிருக்கிறோம். காங்கிரஸ்காரர்கள் இருந்ததை இழந்திருக்கிறார்கள். இருந்ததை இழந்தவர்களின் இதயத்தில் வேதனை எழத்தான் செய்யும். அவர்களை டிசம்பரில் பார்த்ததற்கு இப்போது பார்த்தால் இளைத்திருப்பது தெரியும்!

❊

வலிமையில் நிர்வாகம் இரும்பாக இருக்கலாம். ஆனால் கூர்மையில் அவ்வாறு இருக்கக் கூடாது! அப்படியே கூர்மை இருந்தாலும் அக்கூர்மை சமுதாய விரோத சக்திகளையே தண்டிக்க வேண்டும். நமது அரசு எல்லாத் துறைகளையும் புதிய பார்வையோடு அணுகும்.

❊

முன்னாலே ஆட்சியில் இருந்தவர்களுக்கும்—இப்பொழுது இருப்பவர்களுக்கும் உள்ள வித்தியாசம் இது தான். முன்பு இருந்தவர்கள் யார் எதைச் சொன்னாலும் கேட்க மாட்டார்கள். 'எல்லாம் எங்களுக்குத் தெரியும்; யாரும் சொல்ல வேண்டாம்' என்பார்கள்; ஆனால் நாங்கள் அப்படியல்ல—எல்லாருடைய கருத்துக்களையும் கேட்டுக்கொள்கிறோம்.

❊

இந்தி எதிர்ப்பில் உயிர்நீத்த தியாகிகளுக்கு மரியாதை செலுத்திய பிறகு தான், கோட்டைக்குச்

சென்று பதவியை ஏற்றுக்கொண்டோம். அந்தத் தியாகிகள் இட்டபிச்சையே தி. மு. க. அமைச்சரவை என்று நாங்கள் கருதுகிறோம்! எங்களுடைய அறிவாற்றலால் மட்டும் அடைந்தது என்று நினைக்கவில்லை.

✱

நம் ஒவ்வொருவரின் கடமை—மக்களை எப்படி நலிந்த வாழ்க்கையில் இருந்து தூக்கி விடுவது என்பது தான். அவரவர் தங்கள் தங்கள் துறைகளில் ஏற்ற முடன் பணி புரிவதன் மூலம் இத் தலைமுறையினர் படும் கஷ்டம் அடுத்த தலைமுறைக்காவது இல்லாமல் இருக்கச் செய்ய வேண்டும். அத்தகைய குறிக்கோளுடன் தியாகம் செய்யும் பரம்பரையாக பிற்காலச் சந்ததியினரின் வாழ்வு மலரப்பாடுபட வேண்டும்.

✱

“தி. மு க. ஆட்சி என்ன சாதித்தது” என்று கேட்பவர்களுக்குக் கூறுங்கள்—அரிசியே இல்லாமல் இருந்த களஞ்சியத்தில் இந்த அரசு கொள்முதல் செய்து இருப்பு வைத்திருக்கிறது; பதுக்கலைப் பறிமுதல் செய்கிறது; பதுக்கல் காரர்களைத் தண்டிக்கிறது. முன்பு காங்கிரஸ்காரர்கள் பட்ட கடனையெல்லாம் அடைத்து வந்திருக்கிறது. மக்களின் நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் தமிழை அரியணை ஏறச் செய்திருக்கிறது. அன்று இருந்த விலையைவிட இன்று ஓரளவுக்கு விலையைக் குறைத்திருக்கிறது. அரிசி விலையைக் குறைத்துள்ளதோடு அரிசி இல்லை என்ற நிலையையும் மாற்றி

இருக்கிறது. இது போதாதா என்று கேளுங்கள்! இது கூட உங்களால் செய்ய முடியவில்லையே என்றும் கூறி விளக்குங்கள்.

❋

இல்லாமை, போதாமை நீக்கப்பட்டு, வலியோர் எளியோரை வாட்டிடும் கொடுமை ஒழிக்கப்பட்டு, எல்லோர்க்கும் ஏற்றம், இன்பம், உறுதி அளிக்கப் பட்டு, நாடு பூக்காடாகத் திகழ்ந்திட வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்டு, இந்த நிலை பெறுவதற்கான பணியில் ஒரு சிறு பகுதியையேனும் நாம் செய்து முடிக்க வேண்டும் என்ற ஆவலுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ளோம்.

❋

கூட்டணி இயக்கத்தின் முகப்பாகத் திகழும் தி. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்று நடத்த அதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று மக்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டனர். அரசாங்க நிர்வாகத்தை நடத்தும் பக்குவம் தி. மு. க. வுக்கு வந்து விட்டது. தி. மு க. நிலையான ஜனநாயக அரசை அமைக்கும் என்பதில் மக்களுக்குத் துளிக்கூட சந்தேகமில்லை.

❋

ஜனநாயகத்தில் ஒரு கட்சியின் ஆட்சி போய் மற்றொரு கட்சியின் ஆட்சி வருவது என்பது எல்லா விஷயமும் தலைகீழாக உடனே மாறி விடும் என்று பொருள் கொண்டால் அவர்கள் ஜனநாயகத்தின் பொருளை உணராதவர்கள் தான். ஜனநாயக நாடுகளில் கொள்கை பேதங்கள் அவ்வளவு பெரிதாக

இருக்காது. நடைமுறைத் திட்டங்கள் தான் மாறியிருக்கும்.

எனது நல்ல நோக்கத்தைப் பாராட்ட வேண்டிய காங்கிரஸ்காரர்கள் நான் ஏதோ பிரச்சனையைத் திசை திருப்புவதாகப் பிரச்சாரம் செய்கிறார்கள். எதிர்ப்புக் காட்டுகிறார்கள். நான் இவர்களது எதிர்ப்புக்குப் பயப்படுபவனல்ல; இவர்கள் மூட்டிய எதிர்ப்பு நெருப்பில் குளித்து வெற்றிகரமாக வெளி வந்தவன். தேவைப் பட்டால் மீண்டும் அந்த நெருப்பில் நிற்பேன் !

நாட்டாட்சி செம்மையானதாகிட நானும் எனது நண்பர்களும் அமைச்சரகத்தில் அமர்ந்து பணியாற்றினால் மட்டும் போதாது. அரசு நடத்திட ஆயிரமாயிரம் திறமை மிகு அலுவலாளர்கள் பணியாற்றினால் மட்டும் போதாது. ஆட்சி உண்மையில் செம்மையானதாக அமைந்திட வேண்டும் என்றால் வயலில், தொழிற்சாலையில் அங்காடியில் பணி புரிந்திடும் உற்பத்தியாளர்கள், உழைப்பாளர்கள் அனைவரும் ஆட்சிநடத்திடுவோர் நாமே என்ற உணர்வுடன் தத்தமது கடமையினைச் செய்ய வேண்டும். கற்றறிவாளர் எம்மை நல்வழி நடத்திடச் செய்ய வேண்டும். இதழ் நடாத்துவோர் உடனிருந்து முறை கூறிட வேண்டும். இவர் யாவரும் சேர்ந்து நடத்துவதே அரசு. நாங்கள் உங்களாலே அமர்த்தப்பட்டவர்கள்.

மத்திய அரசுடன் மோதவேண்டும் என்ற விருப்பமோ துடிப்போ எனக்குக் கிடையாது. ஆனால் நாட்டின் முக்கியமான சிக்கலில் முடிவு காண நேரும் போது மோதத்தான் வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் அதற்கும் தயங்க மாட்டேன்.

❋

தனிப்பட்ட முறையிலும் தி. மு. கழக அமைப்பு என்ற ரீதியிலும் எங்கள் அனைவர் ஆதரவும் நியாயத்தின் பக்கமே இருக்கும்.

❋

புதிதாக ஆட்சிப் பொறுப் பேற்றிருப்பதால் புதிதாக கொள்கையைத் தேடிக்கொள்ளவேண்டிய அவசியமோ அவசரமோ எங்கள்கட்சிக்கு இல்லை. புதுப்பொறுப்பு ஏற்றுள்ளதால் புதுக்கொள்கை வேண்டும் என்று எண்ணவும் இல்லை. தொழிலாளர் நலனுக்கு உகந்த பிரச்சனைகளில் எங்களுக்கென்று கொள்கை உண்டு. நாங்கள் நம்பிக்கொண்டிருக்கும் அக்கொள்கையைச் செயல்படுத்த—செம்மைப் படுத்த புதிய பொறுப்பைப் பயன் படுத்துவோம்.

❋

இன்று கிராம மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் அவதியெல்லாம் 20 ஆண்டுக் கால காங்கிரசு ஆட்சியில் உருவானதுதான்! அதை ஒரே நாளில் போக்கிட முடியும் என்பது முடியாத காரியம். கழுத்திலே உள்ள கட்டியை மருத்துவரிடம் காட்டிய மறு நாளே—மருந்து தடவிய உடனேயே அது கரைந்து

விடாது! அறுவைச்சிகிச்சை செய்தால்தான் மறு நாள் கட்டிமாறும்.

எல்லாத்தீமைகளையும் ஓரே நிமிடத்தில் போக்கி விடமுடியாது. உலகத்தில் உள்ள அநீதிகளை ஒழித்து நீதியை நிலைநாட்ட கடவுள் கூட 10 அவதாரங்களை எடுத்ததாக, புராணங்கள் கூறுகின்றன. என் பதவிகாலத்திற்குள் முடிந்தவரை மக்களின் துயர் துடைப்பேன்.

வரி வசூலிப்பதை மாநில அரசுகளிடமிருந்து மத்திய அரசு பிடுங்கிக்கொள்ளும் போக்கு, ஓரே கட்சி எல்லா இடங்களிலும் ஆண்டபோது சரியானதாக இருக்கலாம். இப்போது பல கட்சிகள் பல மாநிலங்களில் ஆளுகின்றன. ஆகவே, அந்தக் கருத்து இப்போது சரியானதாக இருக்காது.

"யார் வரி வசூலித்தால் என்ன? அது இந்தியாவுக்குள் தானே இருக்கிறது" என்று சிலர் விசித்திர வாதம் புரிகிறார்கள். களவாடப்படும் பொருள் கூட இந்த நாட்டில்தான் இருக்கிறது! திருநெல்வேலியில் களவாடியது திருச்செந்தூரில் இருக்கலாம். ஆகவே களவாடியது பற்றிக் கவலைப்பட வேண்டாம். இந்தியாவில் தானே இருக்கிறது என்று யாரும் கூறமாட்டார்கள்.

ஒருவருக்கு உரிய பொருளை எடுத்தாலும்—ஒருவருக்கு உரிய உரிமையை எடுத்துக்கொண்டாலும் **களவு களவுதான்.**

❋

மாநில அரசும் மத்திய அரசும் ஒன்றுபட்டுப் பணியாற்றவேண்டும்-ஒன்ருக்கப்பட்டு விடக்கூடாது.

❋

## தி. மு. க.

தி. மு. கழகம் தன் மனதுக்குச் சரி என்று படுவதைத் திட்டவட்டமாகத் துணிவுடன் அச்சம் தயை தாட்சண்யமின்றி ஆதாரத்தோடு எடுத்துச் சொல்லி அதற்கெனப் பாடுபடுகிறது.

❋

மக்களைப் பழமைப் பிடியிலிருந்து மீட்டு, பகுத்தறிவுப் பாதையிலே நடத்திச் செல்ல திராவிட முன்னேற்றக்கழகம் பெரிதும் பாடுபட்டு வருகின்றது.

❋

கட்சி என்ருல் பதவி, இல்லையேல் கௌரவ நிலை, அதுவும் தவறினல் அதிகாரிகளிடம் பழகும் அந்தஸ்து, அதுவும் இல்லையேல் காண்ட்ராக்டு என்று சிலர் எண்ணுகின்றனர். அப்படிப்பட்ட கட்சி அல்ல நம்முடையது. அப்படிப்பட்ட கட்சி நமக்குத் தேவையில்லை.

❋

கம்யூனிஸ்டுகள், ஏழை—பணக்காரன் என்கிற இரண்டே இரண்டுபிரிவுதான் உண்டு என்கிற போக்குடையவர்கள். நாம் கூறுகிறோம் ஏழை—பணக்காரன் இந்த இருவருக்குமிடையே நடுத்தர வகுப்பினர் என்றோர் பகுதியினரும் உள்ளனரென்று.

நாம் எடுத்துக் கொண்டுள்ள கொள்கையும், அதற்கான திட்டமும், அச்ச மூட்டியோ, பசப்புக் காட்டியோ ஒழித்துக் கட்டிவிடக் கூடியன அல்ல; அடக்கு முறை எனும் நெருப்பாற்றில் நீந்திச்செல்ல நேரிடினும், வெந்து நீறானவர்கள் போக மீதமுள்ள வர்கள் இலட்சியப் பயணத்தை மேற்கொள்வர்.

இன்றைய அரசியலில் சிறிது நேரம் மட்டுமே பிரகாசமாக ஒளி தரும் பட்டாசு போன்ற நிலையில் பல கட்சிகள் உள்ளன. ஆனால், தி. மு. க வோ நீண்ட நேரம் ஒளிதரும் அறிவு விளக்காக விளங்கி வருகிறது.

அறிவுள்ளவன் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியமே. ஆனால் நமது மக்கள் ஓய்வும், சிந்திக்க வாய்ப்பும் இல்லாமல் அல்லல் படுகிறார்கள். எனவே எப்பொருளையும் மெய்ப் பொருளாகவே சொல்ல வேண்டும். இந்த இலக்கணத்தை நமது கழகத் தோழர்கள் கொள்ளவேண்டும்.

கழகத்தின் ஆற்றல் தேக்கி வைக்கப் பட்டிருக்கின்ற மின்சாரம் போன்றது. தேக்கி வைக்கப் பட்டிருக்கின்ற மின்சாரம் எப்படி விளக்கு எரிக்கவும், விசிறி சுற்றுவதற்கும் பயன்படுகிறதோ, அதேபோல் நம்முடைய சக்தியைத் தேக்கிவைத்து, கழகத் தோழர்கள் உரியவழிகளில் பயன்படுத்தவேண்டும்.

❋

மனைவிக்குப் பட்டுப் புடவை தேவையென்றால் அதைக் கணவன்தான் வாங்கித் தரவேண்டுமே தவிர மாற்றான் வாங்கித்தரக்கூடாது. அதே போல் நமது கழகத்திற்குப்பணம் தேவை என்றால், உரியவர்கள் அதைத் தரவேண்டும். மற்றவர் தர வேண்டியதில்லை. தந்தால்—அதைப் பெற்றால்—நம் பண்பு கெட்டுவிடும்.

❋

ஈ அதிகமாகப் பறந்தால் அந்த இடத்தில் பலாப் பழம் இருக்கிறது என்பதை எவரும் புரிந்து கொள்ள லாம். அதைப் போல, ஏராளமானவர்கள் ஏன் இந்த இயக்கத்தில் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள எவராலும் முடியும். அப்படிப் புரிந்து கொள்ள இயலாதவர்கள் அரசியலுக்கே லாயக்கற்ற வர்கள்.

❋

யார் ஏற்றாலும் ஏற்கா விட்டாலும் நான் ஒரு தத்துவத்தைக் கடைப்பிடித்து வருகிறேன். நமக்குள் ஒரு குடும்பப் பாசம் இல்லையேல் நாம் அரசியல் கட்சியாக இருக்க முடியாது. அந்தப் பாசம் இருந்

தால் தான் பலம் இருக்கும். அது குறைந்தால் நம்மையும் அறியாமல் நம்மிடமுள்ள பலம் மறைந்து விடும்.

❋

ஒரு வீடு கட்டுவதற்கு செங்கல் பலம் இருந்தாலும் செங்கல் சுவரில் சாந்து வைத்துப் பூசுவது எப்படிக் கெட்டியாக இருக்குமோ அதே போல் ஒருவருக்கொருவர் பாசம் இருந்தால் தான் ஒரு இயக்கம் நல்ல பலம் பெற்று வளர முடியும்.

❋

காங்கிரஸ்காரர்கள் ஏசுகிறார்களே என்ற காரணத்திற்காக நாமும் திருப்பி ஏச வேண்டும் என்று கருதத் தேவையில்லை. பேச்சாளர்க்கு சுலபத்தில் வரக்கூடிய மொழி திட்டக் கூடியதுதான். அது நமக்குத் தெரியாதது அல்ல. அது பால லீலைகளில் ஒன்று என்று கருதி, அதை நீக்கிவிட வேண்டும்.

❋

தி. மு.கழகம் எந்தப் பிரச்சனையானாலும் உண்மை எந்த முனை நோக்கி ஓடுகிறதோ, அந்த முனை நோக்கியே அதனைத் தேடிச் செல்கிறது.

❋

தேங்காயை தேவாலயத்துக்கு எடுத்துச் சென்று உடைத்து அர்ச்சனை செய்யச் சொல்லி, ஒரு மூடியை அர்ச்சகருக்குக் கொடுத்து விட்டு, இன்னொரு மூடியை வீட்டுக்குக் கொண்டு செல்பவர்களும் உண்டு.

இன்னும் சிலர் வீட்டு விசேடத்தின் போது 'திருஷ்டி' கழிப்பதாகக் கூறி நடு வீதியில்—சூறைக் காய் உடைப்பது போல உடைப்பார்கள்.

இன்னொரு விதமும் உண்டு. தேங்காயைத் தாய் மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பத மாகத் திருகி, எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப் போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள்.

கட்சிகளும் அப்படித்தான். பயன்படுத்துகிற விதத்தை யொட்டித்தான் பலனும் இருக்கும். இந்த வகையில் மூன்றாவது விதத்தைச் சேர்ந்தது, தி. மு. கழகம்.

❋

பொருள் பாடுபடுபவனுக்குப் போய்ச் சேர வேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்கு செலவிடப் படவேண்டும். இரண்டும் நமது கொள்கை. இருவிழிகளில் ஒன்றுக்கு மற் றொன்று பாழாக்கக் கூடாது.

❋

டாக்டர் வீட்டுக்குச் சென்று திரும்புபவருக்கும் சோதிடன் வீடு சென்று வருபவருக்கும், உள்ள வித்தி யாசத்தைப் போலத்தான் மாநாட்டிற்கு வந்து போகின்ற மக்களுக்கும் திருவிழாவுக்குச் சென்று

திரும்புகிற கூட்டத்திற்கும் இருக்கும்—இருக்கிறது—இருக்க வேண்டும்.

❋

நாடகம், சினிமா, பேச்சு, எழுத்து, பொது மேடை, அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய எந்தத் துறையினை எடுத்துக் கொண்டாலும், அங்கெல்லாம் நாம் இருக்கிறோம்; நமது கழகம் அத்தனை துறைகளிலும் ஈடுபட்டிருக்கிறது.

❋

நல்லவை எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் தி. மு. க.வும் சென்று பணியாற்றும். மக்களுக்கு எந்தெந்தத் துறைகளின் மூலம் நன்மையைச் செய்ய முடியுமோ, அத்தனை துறைகளையும் கைப்பற்றியே தீரும்.

❋

மாற்றார் அடித்தால் அதைத் தாங்கிக் கொள்வதில் தான் வீரம் இருக்கிறது. சகித்துக் கொள்வதில் தான் இலட்சியத்தின் வெற்றி இருக்கிறது.

## கைத்தறி

நூல் எப்போதும் சிக்கலாகத்தான் இருக்கும். அதை நம்பி வாழ்கிறவர்களின் வாழ்க்கையிலும் சிக்கல் ஏற்படுகிறது. அதைப் பக்குவமாக நீக்குவது தான் இப்போதைய தேவை.

ஆலைகளில்தான் கண்ணைக் கவரும் ஆடை நெய்ய முடியும் என்று ஒரு காலத்தில் கருதினார்கள். இப்போது ஆலைத் துணிகளை விட மிக நேர்த்தியான துணிகளைக் கைத்தறியில் நெய்கிறார்கள். மிக நேர்த்தியாக—மலிவாக—கண்ணைக் கவரத்தக்க வகையில்—புதுப்புது மெருகோடு கைத்தறி ஆடைகளைத் தயாரிக்கிறார்கள்.

❋

தி. மு. கழகம் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மாலை போடுவதற்குப் பதில் கைத்தறி ஆடை அணிவிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி யிருக்கின்றது. இதை முன்பு கேலி செய்தவர்கள் கூட இப்போது பின்பற்றி வருகிறார்கள்.

❋

கோடிக் கணக்கான மக்கள் இந்தத் தொழிலால் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையைச் சொன்னால் வதைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வெளி நாட்டில் சந்தை தேடிக் கொடுக்கும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்ததாகும்.

❋

நெசவுத் தொழில் இது நாள் நசித்துப்போகாமல் இருக்க—நெசவாளர் பாதி வயிறாவது சாப்பிட உதவுபவர்கள் நமது நாட்டுத் தாய்மார்கள் தான். ஆடவர்கள் எப்படிப் போனாலும் தாய்மார்கள் தான் மறவாமல் கைத்தறி ஆடைகளை வாங்குபவர்கள்.

❋

# மொழி

இந்தியா ஒரு நாடல்ல ஒரு உபகண்டம். பல இனமக்கள் வாழும் ஒரு பரந்த நிலப்பரப்பு. இங்கே ஒரே ஆட்சி நிலவுவதென்பது முடியாது. அதுபோல ஒருமொழி அரசாங்க மொழியாவதும் இயலாது.

செயலாளர் என்ற இனிய தமிழ் இருக்கக் காரியதரிசி என்கிற வடசொல் ஏன்? உரிய மனைவி கண்ணகி இருக்க, கணிகை குல மாதவி ஏன்? செந்தமிழ் மொழியில் தேவையற்ற பிறமொழிச் சொற்கள் நுழைவானேன்?

மொழிப்பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத் தக்கது.

ஒருமொழியையே பேசும் ஒரு நாட்டவரிடையே பலவகைப் பட்ட பிளவுகளும் சச்சரவுகளும் காணப்படும் நிலைமையில் பல மொழிகளைப் பேசும் பல நாட்டவரையும் ஒரு பொது மொழி கற்பதனால் ஒற்றுமையாக்கி விடலாமென்று கருதிப் பாடு படுவது 'உமிகுற்றிக் கைசலித்த' பான்மையாக முடியுமல்லது அதனால் யாதும் பயன் விளையுமென்று சொல்லமுடியுமா?

மொழிப்பிரச்சனையில் தீர்வு காண முடியா விட்டால் இந்த அரசு, பதவி விலகத்தயங்காது. இப்போதுள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொண்டே மொழிப்பிரச்சனைக்குத் தீர்வு எடுப்பதற்கான சூழ்நிலை உருவாகவேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

தமிழ்வளம், ஆங்கில ஆர்வம், இந்தி எதிர்ப்பு இம் மூன்றும் யாரிடம் இருந்தாலும் அவர்களை வாழ்த்த வணங்க நாம் கடமைப் பட்டுள்ளோம். தமிழ் அழிக்கப்பட்டால் நாம் இல்லை. ஆங்கிலம் இல்லாவிட்டால் பிற நாட்டினரோடு நமக்குத் தொடர்பு இல்லை.

## மதுவிலக்கு

எது எதெற்கோ தேசீய அடிப்படையில் கொள்கை வகுக்க மத்திய அரசு முன் வருகிறது; கல்வித்திட்டத்தில் கூட "தேசீயக் கல்வித் திட்டம்" என்று திட்டம் வகுக்கின்றனர். ஆனல் 'மதுவிலக்குக் கொள்கை' நாடு முழுவதும் ஒரே சீரானதாக இருக்கத் திட்டம் வகுக்க மத்திய அரசாங்கத்தால் இயலவில்லை.

இன்று எத்தனையோ குடும்பங்களின் மகிழ்ச்சிக்கு—தாய்மார்களின் மகிழ்ச்சிக்கு மதுவிலக்குக் காரணமாகும்.

மதுவிலக்கை நீக்குவதால் பொதுமக்களின் பொருளாதாரத் துறையில் வளர்ச்சி ஏற்படும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. மது விலக்கைத் தளர்த்தி, கள்ளுக் கடையைத் திறப்ப தால் மக்களிடம் எப்படிப் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுவிடமுடியும்? மக்கள் இப்போது உணவு உடை போக்கு வரத்து முதலியனவற்றுக்குச் செய்து வரும் பணத்திலிருந்துதானே (மதுவிலக்கை நீக்கினல்) அதற்குச் செய்வார்கள்? இது எந்த வகையில் பொருளாதாரத்தை வளர்க்கும்?

மதுவிலக்கு நிச்சயமாக சமுதாயத்திற்குக் கிடைத்த ஒரு பெரிய பலன்—நலன் என்றே கருது கிறேன்.

மதுவிலக்கு ஒரு பெரிய சமுதாய நலத்திட்டம் என்பது என்கருத்து. அதனல் மக்கள் எவ்வளவோ நன்மை யடைந்திருக்கிறர்கள் என்பதை மறுக்க முடியாது—மறைக்கவும் முடியாது.

## சட்டம்

சட்டங்கள் அவசரமாக இயற்றப்படாமல் மிகுந்த ஆலோசனைக்குப் பிறகே இயற்றப்பட வேண்டும்.

ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சியிடம் நம்பிக்கை யின்மை. எதிர்க்கட்சிக்கு ஆளும் கட்சியிடம் நம்பிக் கையின்மை. இப்படி யொருவருக்கொருவர் அவநம் பிக்கை கொண்டால் சமூகம் யாரிடம் நம்பிக்கை வைக்கும் இந்த நிலை வளருமானால் குழப்பம் ஏற்படும். அது புரட்சியாகமாறும். ஆகவேதான் நீதியிடமாவது மக்கள்நம்பிக்கை கொள்ள வேண்டும். அதற்கேற்ற வாறுநீதித்துறை இயங்கவேண்டும்.

சட்டம்—ஒழுங்கு பற்றிய பழைய தத்துவத் தோடு புதிய காலமும் மக்களாட்சி உணர்வுகளும் பொதுமக்கள் தேவைகளும் இணைக்கப்பட வேண்டும்

சட்டம் ஒழுங்கு இவைகளைக் கைவிரலுக்குள் வைத்துக் கொள்வதால் மட்டுமின்றி பொது மக்களுடைய ஒத்துழைப்பின் மூலமும் நாம் வெறுப் புணர்வுகளை அகற்ற முடியும்.

## மக்கள்

திருத்தணி, திருப்பதி, திருவாரூர், சிதம்பரம் போன்ற திவ்யக்ஷேத்திரங்களையும் ஆங்காங்கு நடக்கிற விழாக்களைப் பற்றியும் தெரிந்து கொள்ளக் காட்டுகிற அளவுக்கு ஆசையை, ரேடியோவின் மூலம்

லண்டன், கல்கத்தா, இரங்கூன் ஆகியவை பற்றித் தெரிந்து கொள்வதில் காட்டமாட்டார்கள்.

✱

கோழி வளர்ப்பார்கள், குரங்கை வளர்ப்பார்கள். இன்னமும் ஏதேதோ செய்வார்கள். ஆனால், உலகத்தில் பிறந்தவர்களை எப்படி வளர்ப்பது என்ற கவலை கிடையாது. மரம் வைத்தவன் தண்ணீர் வார்க்கிறான் என்று கூறிவிடுவார்கள்.

✱

மேல்நாட்டினர் பொருளைத் தேடிக்கொள்வதிலும் அதனைச் சரியான முறையில் பயன் படுத்துவதிலும் காலங்கழித்தார்கள் ஆனால் நம்மவர்களோ பொருளை அநித்யமென்று கூறிக் கொண்டு, அதே பொருள் தரும் சுகத்தில் வாழ்ந்தார்கள்—வாழ்கின்றார்கள்.

✱

பழந்தமிழர்கள் தாங்கள் வாழ்ந்த முறையை வகைப்படுத்திக் கூறியிருக்கிறார்கள். தான் வாழ்ந்தால் மட்டும் போதாது; தான் வாழ்வதன் மூலம் மற்றவர்கள் வாழ்க்கையும் வளம் பெறவேண்டும் என்று கருதினார்கள்.

✱

ஒருவர்க்கொருவர் மாறுபாடான கருத்து இருந்தாலும் மதிக்க வேண்டும்; அப்படி மதிப்பதாலேயே ஒன்றுபட்டுவிட வேண்டும் என்பதில்லை.

சகல சக்தியும் கிளர்ப்பும் ஊற்று, ஜனசக்தி. மக்கள் குடும்ப பாரத்தால் வளைந்து போகக்கூடும். ஆனால் அவர்களுக்கு முக்கியமான பிரச்சனைகளைப் பற்றிச் சிந்தித்து முடிவு கட்ட நேரமில்லை. அதனாலேயே அவர்கள் ஏதுமறியாதவர்கள்—எதையும் சிந்தித்து முடிவு செய்யும் ஆற்றல் அற்றவர்கள் என்று கூறுவது தவறு. ஜனநாயகக் கோட்பாட்டிற்கே விரோதம். மனித சக்தி மகத்தானது. மக்களின் தீர்ப்பே முடிவானது.

*

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனதிலே உள்ள மாசு, மதவெறி, ஜாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.

*

பெரும்பாலான மக்கள் சுகமாக வாழவேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள். அதுதவறும் ஆகாது. அந்தச் சுக வாழ்வுக்கு என்ன வழி என்று சிந்தித்தபோது கிடைத்த பல எண்ணங்களிலே மிக முக்கியமானது சுதந்திரம் என்ற கருத்து.

*

திறமைமிக்க ஓவியக்கலைஞன் திரையில் தீட்டிய தீங்கனி குலுங்கும் மரத்தின் காட்சியைக் கண்டு உயிர்ப்பறவை மயங்கி, கனியை அங்கு வட்டமிடும் காட்சிபோல தந்திரமான பிரச்சாரத்தால் மயங்கிவிடும் மனப்பான்மை பொதுமக்களிடம் இருக்குமானால்

மக்களாட்சிக் காலத்தில் சாதுர்யக்காரர்கள் சர்வாதிகாரம் பெறமுடியும். ஆகவேதான், இந் நாட்களிலே மக்களின் சுதந்திர வாழ்வுக்குச் சிந்தனைத் தெளிவுதான் மிகவும் அடிப்படையாகத் தேவைப் படுகிறது.

❋

அரிசிப் பஞ்சமும் அமெரிக்கா நாட்டுப் பிரச் சனையும் ஒருசேர மக்களின் முன்வந்து நிற்கும்போது, அமெரிக்கத் தேர்தலைப்பற்றி அல்ல—அரிசி விஷய மாகத்தான் மக்கள் அதிகமான அக்கறை காட்ட முடியும்.

❋

மக்கள் எழுச்சியின் முன்பு எந்தக் கொடுமை தான் நிலைத்து நிற்கமுடியும்? ஜார் நிற்கவில்லை. பிரெஞ்சுக் குபேரர்கள் நிற்கவில்லை. கொடுங் கோலர்கள் யாருமே நிற்கமுடியவில்லை. குப்புற விழுந் தனர். தவிடு பொடியாயினர்.

❋

யார் ஆண்டால் என்ன? இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன? என்று சும்மாயிருந்துவிடுவது தவறு. எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பாரதியார் சொன்னார் என்றால், எல்லோரும் எப்போதுமே மன்னர்கள்தான் என்று நினைத்துக் கொள்ள முடியாது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை தேர்தல் வரும்போது, ஓட்டுப் போடுகிற நேரத்தில் தான் — அதுவும் ஓட்டினை பெட்டி

யினுள்ளே போடுகிற அந்த இரு வினுடிவரைதான் எல்லோரும் மன்னர். எனவே அவரவரும் தத்தம் கடமையைச் செய்தால்தான் அதற்கேற்ற சர்க்காரும் வரும். தேர்தலுக்குப் பிறகு எல்லோரும் மன்னரல்ல —குடிமக்கள் தான்.

இரண்டு நண்பர்கள் நீண்ட நாள் கழித்து அங்காடியில் சந்தித்துக் கொள்ளும்போது நன்ருக இருக்கிறீர்களா என்று ஒருவர் மற்றொருவரைக் கேட்பார். என்னமோ இருக்கிறேன் என்றுதான் மற்றவர் பதில் சொல்வார். இறக்கவில்லை என்று தான் பொருள்கொள்ள முடிகிறது. அதனுல் அப்படிப்பட்ட ஒரு நாட்டில் வாழ்ந்து எப்படி இருக்க வேண்டும் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவர் இலக்கணம் வகுத்துக் கொடுத்திருக்கிருர். அவரையும் பெற்று—அவரது திருக்குறளையும் பெற்றுக் கொண்டு இன்னமும் நாம் வாழ்வு பெருமல் இருப்பது வருந்தக் தக்கது.

## கலை

கலை ஓர் இனமக்களின் மனப்பண்பு. அவ்வின மக்களிடையே தோன்றும் தெளிவு, வீரம், ஆகிய வற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இனவளர்ச் சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வருமென்பதே நுண்ணறிவினரின் துணிவு. கலை உலகில் அவ்வப்

போது மாறுதல் உண்டாகும். இனத்துக்கோர் கலையும் இடத்தின் இயல்பு, தட்ட வெட்பம் ஆகியவற்றுக்கு ஏற்ற முறையிலும் கலை உண்டாகும். வளரும்; மாறும்.

☀

மற்றநாடுகளின் கலைச் சிறப்புக்கும் நம் நாட்டின் கலைவளர்ச்சிக்கும் அடிப்படையான ஒரு வித்தியாச மிருக்கிறது. செல்வ வளத்தோடு மற்ற நாடுகளிலே கலையை வளர்க்கிறார்கள். ஆனால் நம்முடைய நாட்டிலோ ஏழ்மை இருக்கும் போதே கலையும் வளர்க்கப்படுகிறது; மக்கள் வறுமை நிலையிலும் கலைச் சுவையை நுகர்கிறார்கள்—கலைஞர்களை வாழ்த்து கிறார்கள்.

☀

கலைத்துறையின் மூலமாகத்தான் மக்களிடையே பெருவாரியான மூடப்பழக்க வழக்கங்களும், கண் மூடிக்கருத்துக்களும் புகுத்தப்பட்டுள்ளன. அதனால் தான் அதேதுறையின் மூலமாகவே மக்களிடம் புகுத்தப்பட்ட கேடுகளைக் களைந்தெறிய நாங்கள் உழைத்து வருகிறோம்.

☀

"என்ன இருந்தாலும் சார், கலையைக் கெடுக்கக் கூடாது பாருங்கோ" என்று குழைவுடன் கூறும் குணாளர்களைக் கேட்கிறேன்; கலை மக்கள் நிலையை மாசுபடுத்தும்போது, அந்தக் கலையைத் தொலைக் காமல் வேறென்ன செய்வது".

☀

சீமான்களின் சொகுசுக்குச் சுந்தரிகளைப் பலியிடும் சூழ்ச்சியே நாட்டியக் கலையாக இங்கு இருக்கிறது. இந்தநிலை மாற்றப் பட்டு மக்கள் வாழ்க்கையை வசீகரமாக்கும் வளமுள்ள கலையாக அது உயர்த்தப் படவேண்டும்.

நாட்டிற்கு ஏதாவது இன்னல்கள் வந்தாலும் மக்கள் துயர்ப்பட்டாலும் கலைத்துறையில் உள்ள வர்கள் தட்டாமல் தயங்காமல் உதவி வந்திருக் கிறார்கள். அவர்கள் உதவுவது மட்டுமல்ல, பொது மக்களிடமிருந்தும் நிதி திரட்ட உறுதுணையாக இருந்து வந்திருக்கிறார்கள். கலைத்துறையினருக்கு வள்ளல் தன்மையையும் இன்னலுற்றபோது உதவும் ஈகைத் தன்மையையும் பாராட்டும் அதே நேரத்தில் அந்தத் துறைக்கு வருவாயும் இருந்திட வேண்டும் என்பதை நாடு உணரவேண்டும்.

## நாடகம்

சமுதாயத்திலே புதிய துறைகள். அதன் அமைப்பிலே புதியதோர் மாற்றம் தேவை. அந்தப் புதிய உருவத்தை உருவாக்கும் உயரிய பணிதான் மறுமலர்ச்சி. அதன் அவசியத்தை மிகப் பெரும் பாலான மக்களுக்கு உணர்த்துவிக்க நாடகமே நல்ல கருவி.

இயல், இசை, நாடகம் மக்கட்கு அறிவு வளர, ஆர்வ மூட்ட, அகமகிழ்வு பிறக்க, நன்னெறியைக் காட்டப் பயன்பட வேண்டும்.

✱

அறிவு வளர, ஆர்வம் பிறக்க, மகிழ்ச்சி தோன்ற, மக்களை நன்னெறியிலே புகவைக்க, நற் பண்புகள் உள்ளத்திலே குடிபுக—இப்படிப்பட்ட நற்காரியங் களுக்கு, முத்தமிழ் அதிலும் முக்கியமாக நாடகம், பயன்படல் வேண்டும் என்பது அடிப்படை உண்மை. இதைக்காலம் மாற்ருது.

✱

வாழ்வு என்பது அனைவர்க்கும் உள்ள உரிமை. இதைப்பறிக்கும் முறையில் உள்ள அமைப்புக்கள் அழிக்கப்பட வேண்டியன என்பதை விளக்கும் நாடகம் நடத்திஞல் இது பொதுவுடைமைப் பூதத் துக்குச் செய்யும் பூஜை என்று கூறவும் இந்த நாட்டிலே, இந்த நாளிலே சிலர் இருக்கத்தான் செய்கிருர்கள். அவர்கள் மூலம் நாடகத்துறை மறுமலர்ச்சிக்குக் குந்தகம் ஏற்படுகிறது.

✱

நாடகத்துறையிலே பூத்திருக்கின்ற மறுமலர்ச்சி ஒழுக்கக் கேட்டை உண்டாக்காது. ஒழுக்கம் என்பது எது என்பதை விளக்கமாக்கி விட்டு, ஒழுக்கத்தை வளர்த்துச் செல்லும்; நீதி நேர்மையை அழிக்காது, நீதி எது என்று கண்டறிந்து நிலை நாட்டும்.

இந்தக் காலம் மனுவை மறுக்கும் காலம் மட்டுமல்ல, மன்னர்களையே வீட்டுக் கனுப்பிவிட்ட காலம். நாடக மேடை மாற வேண்டாமா இதற்கு ஏற்றபடி! மாறுகிறது; அந்த மாற்றத்தின் பெயர்தான் நாடக மறுமலர்ச்சி.

அறிவு வளர்ச்சிக்கு நாடகம் பயன்படவேண்டும்.

பொதுவாழ்வில் ஈடுபட்டவர்கள் நடிக்கவும் நடிகர்கள் பொதுவாழ்வில் ஈடுபடவுமான சூழ்நிலை உண்டாகிவிட்டது. இதற்குக் காரணம் நான்தான். நாடகத்தின் மூலமாகத்தான் நல்ல விதத்தில் முன்னேற்றத்தைக்காண முடியும் நாட்டில் என்பதால்தான் இதைச் செய்ய வேண்டியதாயிற்று.

## விஞ்ஞானம்

விஞ்ஞானம் குழைத்துக் கரைக்கப்பட்ட வண்ணச்சுண்ணம். அதனைக் கொண்டு அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம். கோரமான குரங்கின் உருவையும் எழுதலாம். குரங்கு எழுதப் பட்டால் குற்றம் கலர் கிண்ணத்தின்மீதா? எழுதும் ஓவியன் மீதா?

நாம் அறிவுத் துறையில் முன்னேற்ற மடைந்தால் தான் நம்மிடமுள்ள பழமைக் கருத்துக்கள் அகலும். பாசிபிடித்துப்போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும். மதமூட நம்பிக்கைகள் முறியடிக்கப் படும் என்பதை நாம் உணரவேண்டும்.

❋

வேண்டும் போது வேண்டிய அளவு பொழியச் செய்கிறார்கள் மழையை. ரிஷிகளா? அல்ல! முனிவர்களா? அல்ல! ஆஸ்திரேலிய நாட்டு விஞ்ஞானிகள்! அவர்கள் அல்லவா உலக உத்தமர்கள்!

❋

ஒரு சிறு மின்சாரவிளக்கு தரும் அளவுக்கு ஒளிபெற நாம் எத்தனை அகல் விளக்குத் தேட வேண்டும்—கணக்குப் போட்டுப் பாருங்கள்—பிறகு கூறுங்கள். விஞ்ஞானம் அதிக உழைப்பு எனும் சிறையிலிருந்து நம்மை மீட்டுவிடுதலை வீரனுக்குமா அல்லவா என்பதை.

❋

நீரிலே நெருப்பு இருக்கிறது என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள், நீரோட்டத்தை இன்று மனித வாட்டத்தைக் குறைக்கும் சாதனமாக்கி யுள்ளனர். மந்திரத்தின் துணை கொண்டல்ல—மதியின் துணைகொண்டு.

மேட்டூர்—மலைமீது! கோலார்—பாதாளத்தில்! மலைமேல் இருக்கும் நீரைக்கொண்டு பாதாளத்தில் இருக்கும் சுரங்கத்தைப் பட்டப் பகல் போலாக்கியுள்ளன மின்சார விளக்குகள். இந்த அற்புதத்தைச் சாதித்துள்ள விஞ்ஞானத்தை விட நமக்கு உற்ற தோழன் வேறு யார்?

❋

மேனாட்டவரின் வாழ்வு கலை ஒலியுடன் திகழ்கிறது. இங்கோ? கவலை ஒலியே கேட்கப் படுகிறது. காரணம்! அவர்கள் விஞ்ஞானத்தின் துணையால் உழைப்பின் கடினத்தைக் குறைத்துக் கொண்டுவிட்டனர். இங்கோ மனித உழைப்பே இன்னும் அதிகமாக இருக்கிறது.

❋

ரேடியோவும் டெலிபோனும் ஒலிபெருக்கியும் மின்சாரமும் ஞானப்பால் உண்டதனால் வந்த வல்லமைகள் அல்ல அசரீரி அடி எடுத்துக் கொடுத்ததால் உண்டான அற்புதங்களுமல்ல. தன்னலமற்ற அறிவாளிகளின் உழைப்பால் விளைந்த உன்னதப் பொருள்கள் அவை.

## கல்வி

ஒரு நாட்டின் முன்னேற்றம் அரசியலில் மட்டும் இல்லை. நாட்டில் கற்றறிவாளர்கள் எந்த அளவில் இருக்கின்றனரோ, அதைக் கொண்டுதான் நாட்டு முன்னேற்றத்தை மதிப்பிட இயலும்.

செல்வத்தில் எல்லாம் சிறந்த செல்வம் கருத்துச் செல்வம். அடுத்துவரும் தலை முறையினருக்கு அத்தகைய செல்வத்தை நாம் விட்டுச் செல்லவேண்டும். அதற்கான பணியில் ஈடுபட்டால் சமுதாயம் நன்கு வாழமுடியும்.

மருத்துவத்துறையும் கல்வித்துறையும் முழுக்க முழுக்க மாநில அரசுப் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும், மத்திய அரசைக் கேட்டுச் செயலாற்றும் நிலையே காணப்படுகிறது. நாடு ஆரோக்கியமாக இருக்கவே அத்துறைகள் மாநில அரசின் பொறுப்பில் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மருத்துவத்துறை பல்வேறு விதத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. உயிர்போகும் நேரத்தில் கூட அதை அரைமணி நேரம் பிடித்து இழுத்து நிறுத்தி வைக்கும் அளவுக்கு மருத்துவத்துறை முன்னேறியிருக்கிறது. இன்னும் மேம்படுத்த முயலவேண்டும்.

பென்சிலின் மருந்தின் பெருமையைப்பேச வேண்டிய இக்காலத்தில் சஞ்சீவி பர்வதத்தின் அருமையைப் பேசுவதுதான் கல்வி என்றால், அதற்குப் பள்ளிக் கூடங்கள் ஏன்? பஜனைக்கூடங்கள் போதுமே!

ஒரு அழகேசனைக் காங்கிரசிலும், ஒரு காமராசரை மந்திரி சபையிலும், ஒரு லட்சுமணசாமியை வைத்தியத் துறையிலும், ஒரு ராஜமன்னாரை உயர் நீதிமன்றத்திலும், ஒரு பத்ரோவை போலீஸ் துறையிலும் ஆட்சி செய்ய உதவிய முறைதான் கம்யூனல் ஜி. ஓ.

## ஏடுகள்

உள்ளம் வளர்கிறது சிந்தனையால்—உலகில் உலவும் எண்ண அலைகளால்—வாழ்க்கை எனும் ஆசிரியன் புகட்டும் பாடங்களால்—இலட்சியங்கள் புதிது புதிதாகப் பிறக்கின்றன. இவைகளுக்கேற்ற வண்ணம், அறிவுத்தாகம் ஏற்படுகிறது. அந்தத் தாகத்தைத் தீர்க்கும் ஏடுகளை நாடுகிறோம்.

இயற்கை நுட்பங்களைக் கண்டறிந்து, மனித சமுதாயத்துக்கு உள்ள இன்னலைத் துடைத்து, இதம் தந்து, உலகைப் புதியதாய், வசதியதாய் ஆக்கித்தரும் விஞ்ஞான வித்தகர்களின் வாழ்க்கை வரலாறுகளும் ஆராய்ச்சிகளும் இன்றைய நிலையில் சுவையும் பயனும் தந்து மக்கள் உள்ளத்தைக் கவரவல்ல, அருமையான நூற்களாக அமைகின்றன.

அந்தந்தக் காலத்திற்கேற்ற முறையில் நூல்கள் மாறினாலும், இறந்தகால ஏடுகள் அனைத்தும் இறந்துவிடுவதில்லை.

அறிவு ஓர் தொடர்கதை அதற்கு ஆசிரியர்கள் தொடர்ந்து தோன்றியபடி இருப்பார்கள்.

❋

கூரிய வாள் — பலமான கேடயம், அஞ்சா நெஞ்சு; ஆனால் அந்த வீரனின் விழி பழுது. இந்நிலை நாட்டுக்குச் சிறப்பும் அளிக்காது. நல்லாட்சிக்கு வழி கிடைக்காது. நாட்டுநிலை உலக நிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டு நிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம் நாட்டுக்கோர் நிலை ஏற்படச் செய்யவேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை.

❋

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவா கல்யாணத்தின் போது திருப்பதியில் வாங்கினோம் இந்தத் தாம்பாளத்தை! பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம் இந்த இரத்தின ஐமுக்காளத்தை. கார்த்திகை தீபத்தின் போது திருவண்ணாமலையில் வாங்கினோம், சிதம்பரத்திலே ஆருத்ரா தரிசனத்தின் போது இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். ஆனால் பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள்.

❋

புத்தகசாலை அமைக்கும்போது ஏற்கனவே நமது மக்களின் மனத்திலே ஊன்றிப்போயுள்ள அர்த்தமற்ற

அவசியமற்ற கேடே கூடச் செய்யக் கூடிய எண்ணங் களை நிலை நிறுத்தக்கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது. சேர்த்தால் மனவளம் ஏற்படாது. மனம் சதுப்பு நில மாகும். பழமைப் புழுக்கள் நெளியுமிடமாகும்

❋

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங் களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து, அதற்குப் புத்தகசாலையென்று பெயரிடுவது, குருடர் களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர் வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக் கூத்தாக முடியும்.

❋

பஞ்சாங்கம் அல்ல புத்தகசாலையில் இருக்க வேண்டியது. அட்லாஸ் — உலகப்படம் இருக்க வேண்டும்.

❋

நாட்டிலுள்ள ஏடுகள் நாட்டிலுள்ளதை, நடப் பதை—மக்கள் வாழ்க்கை முறைகளை வகுத்துக் காட் டும் கண்ணாடியாகக் காட்சியளிக்க வேண்டும். நாட்டு மக்களை மேன்மையுறச் செய்யும் தூண்டா விளக் காய்த் துலங்குதல் வேண்டும். நாட்டிற்கும் ஏட்டிற் கும் தொடர்பிருக்க வேண்டும். நாட்டோரை நடுநிலை பிறழா நல்ல நீதிபதிகளாக்க உறுதுணை செய்யும் ஊன்றுகோலாக உதவ வேண்டும்.

# அரசியல்

உடனடியான அரசியல் இலாபத்தை விரும்புபவர்கள், வெட்டுக் கிளிபோல இங்குமங்கும் தாவுவர்—மரம் பழுத்தால் வௌவாலாவர்; புயலடிக்குமென்று தெரிந்தால் சந்து பொந்துகளைத் தேடிக் கொள்வர்—கஷ்ட நஷ்டம் வருமெனத் தெரிந்தால் காவடி தூக்குவர்; உடனுக்குடனேயே கணக்குப் பார்த்துக் களிப்படைவர்.

❋

ஆளைப் பிடித்து மிருகத்தனமான முறையிலே அடித்துக் கொன்று போடும் காட்டு மிராண்டி முறை மாறி, ஒரு சிறு ஊசியில் விஷத்தைத் தோய்த்து வைத்து, அதனால் அவனும் அறியாவண்ணம் குத்தி, ஆளைச் சாகடிக்கும் சாகசக் கொடுமை வளர்ந்திருப்பது போலவே, இன்று, ஒரு நாடு, மற்றோர் நாட்டின் மீது ஆதிக்கத்தைப் புகுத்துவதற்கு, மிகமிக இலகுவான முறைகளைக் கற்றுக் கொண்டுள்ளன வல்லரசுகள்.

❋

அணைத்தல்—பிணைத்தல் — கட்டுண்டு கிடத்தல் இவை வெவ்வேறு...! மாநில—மத்திய சர்க்கார் உறவு எம் முறையில் இருந்தால், பொது நன்மையைக் கெடுக்காத வகையில் மாநிலத்தின் மாண்பும் வளமும் ஏற்றம் பெறமுடியும் — என்பது அக்கறையுடன் கவனித்தாக வேண்டிய பிரச்சனையாகும்.

சிறைக்குள் தள்ளி கிளர்ச்சியை அடக்கிய எந்த வல்லரசும் வரலாற்றில் இடம் பெற்றதில்லை. பாசிசத்தின் முதல்அடி பயங்கரமானதாகத்தான் இருக்கும். ஆனால், அதன் வீழ்ச்சி எதிர்பாராத நேரத்தில் இருக்கும். திடீரென்று சரியும்.

✱

மக்களை அணுகி ஓட்டு வாங்கவும் தெரிய வேண்டும். மார்புக்கு நேரே துப்பாக்கிக் குண்டு பாய வருகிறது என்றால், அதையும் தாங்கிக் கொள்ளவும் துணிவு இருக்க வேண்டும்.

✱

எந்த அரசியல் கட்சிக்கும் ஊர் மக்கள் உள்ளத்தில் உன்னத இடம் கிடைக்க வேண்டுமென்றால், அந்தக் கட்சியினர் வீரர்கள் மட்டுமல்ல, விவேகிகள் என்று, மாற்றுக் கட்சியினரும் கூறும் விதத்திலே அந்தக் கட்சித் தோழர்கள் நடந்து கொள்ள வேண்டும்.

✱

அரசியல் கட்சி என்றால், மக்களுக்குத் தேவைப்படுகிற சிற்சில கொள்கைகளைத் தயாராகவைத்திருக்க வேண்டும். ஆனால் அக் கருத்து இதுவரை யாரும் சொல்லாததாக இருக்கவேண்டும். அதைச் சொல்லி மக்கள் ஆதரவைப் பெற வேண்டும்.

✱

அறிவியலின் ஒரு பகுதி அரசியல். அரசியலை நீக்கிவிட்டு அறிவைப் பெறமுடியுமா? அரசியலில் மாணவர்கள் ஈடுபடக்கூடாது என்றாலும் அரசியலைப்

பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதைச் செய்தால்தான் அரசியல் நாகரிகம் வளரும்.

## மறுமலர்ச்சி

ஒருசிலர் ஓயாது உழைத்து. சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை என்னும் உணர்ச்சிகளுக்கு பலியாகி விடாமல், புன்னகையும், பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்டமரம் துளிர்விடும் வரையில் பாடு பட்டு, வெற்றி கண்டு மறுமலர்ச்சியை உண்டாக்கி வைக்கிறார்கள்.

❋

சுக்கு நூறாகிவிட்ட கலம், கடலடி சென்று ஆண்டு பல ஆனபிறகும், விஞ்ஞானக் கருவிகள் மூலம் கடலடி சென்று, கலத்தின் பகுதிகளையும், அதிலிருந்த பொருள்களையும் எடுத்துவரும் பெருமுயற்சியில், மேலைநாட்டவர் உன்னதமான நிலைமையில் வாழ்ந்து வரும்போது, உலகிலே உயரிடம் பெற்றுத் திகழ்ந்து, இடைக்காலத்திலே எத்தரின் பிடியிலே சிக்கியதால் சீரழிந்த நாட்டையும் சமுதாயத்தையும் புதுப்பிப்பது ஏன் சாத்தியமாகாது? இந்தத் தளராத நம்பிக்கை தான் மறுமலர்ச்சி இயக்கத்திலே பணிபுரிபவர்களுக்கு உள்ள பெரியதோர் துணை.

❋

மறுமலர்ச்சி என்பது மாண்புகளை மாய்த்திடும் நஞ்சு அல்ல—மாண்புகளை மாய்க்கும் நச்சுப் பூச்சிகளை அழித்திடும் முறை.

# மேடைப் பேச்சு

பேசாமலிருப்பது வேண்டுமானால் சிரமம்—சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதரிது—பேசுவது எளிது—பேசுவதை ஒழுங்குக்கும் முறைக்கும் கட்டுப்படுத்துவதுதான் மேடைப் பேச்சு.

✹

மக்களுக்கு ஆள்பவர்களின் தன்மை, நோக்கம், திட்டம் இவைகளைப்பற்றிக் கண்காணிக்கும் பொறுப்பு அதிகரித்து விட்டது. இந்தக் கண்காணிப்பு வேலைக்கு மேடைப் பேச்சு முக்கியமான துணையாகிறது.

✹

நீதியை நிலைநாட்ட, நேர்மையை வலியுறுத்த, நாட்டிற்கேற்ற திட்டங்களை எடுத்துரைக்க, மடமையை மாய்க்க, கொடுமைகளைக் களைய, சிறுமைகளை—சீரழிவுகளைப் போக்க ஆர்வம் தோன்ற வேண்டும். அந்த ஆர்வம் ஏற்படுத்தும் சிந்தனையிலே பூத்திடும் நல்ல கருத்துக்களை அழகுறத் தொடுத்து அளிப்பதே மேடைப் பேச்சு.

✹

மலர்மாலை மதயானைமுன் வீசப்பட்டுக் காலில் மிதிபடுவது போல, நல்ல பேச்சுக்குப் பொல்லாத நிலை வருவதுமுண்டு; முகர்ந்து ரசித்துக் கூந்தலிற் செருகி, இன்புற்று மகிழும் மாதரிடம் மலர் சென்று பெருமையும் பயனும் கண்டறிந்து பெறக்கூடியவர்களிடம் போய்ச் சேருவதும் உண்டு.

# வாலிபர்கள்

வைதீகம் என்னும் நோய்க்கு டாக்டர்கள் மருந்து கொடுத்துக் குணப்படுத்த முடியாது. பின் யாரால் அந்த நோயைப் போக்கடிக்க முடியும்? வாலிபப் பருவத்திலுள்ள மாணவர்களால்தான் முடியும்!

*

சுதந்திரம்—விடுதலை என்றால் சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை—புது அழகு—புது உருவம்—புதிய மகிழ்ச்சி—நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான். உண்மையும் அதுதான்.

*

பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் சோபிதத்தைக் காட்டிப் புத்துலகு அமைக்க வேண்டும் வாலிபர்கள்.

*

பழமையை விரும்பும் முதியவர்களைக் கொண்டு புதுமைச் சித்திரத்தைத் தீட்ட முடியாது. அவர்கள் ஏதோ ஒருவகை ஓவியத்தைத் தீட்டிய பிறகு அவர்களைக் கோபித்துக் கொள்வது வீண் வேலை. எனவே வாலிபர்கள் தாமாக முன்வந்து புதுமை ஓவியத்தைத் தீட்டியாக வேண்டும்.

*

உலகெங்கும் கல்வியும் தொழிலும் வளருவதைப் படித்துவிட்டு இங்கு 100-க்கு 80 பேருக்குமேல் படிப்

பற்று இருக்கக் காண்கின்றபோது ஆத்திரம் வருகிறது வாலிபர்களுக்கு! வரத்தானே செய்யும்? வரத்தானே வேண்டும்!

❊

வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும்—உலகத்தைக் கிராமத்தாருக்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். நாட்டு மக்களின் உடல், உள்ளம் இரண்டிலும் உள்ள நோய் தீர்க்கும் மருந்தளிக்க வேண்டும். ஆம்! வாலிபர்கட்கு வேலை ஏராளமாக உள்ளது.

❊

மக்கள் வாழ விழைந்த மாவீரர்களின் வரலாற்றைப் படித்தவர்கள் வாலிபர்கள். எனவேதான் அவர்கள் சிந்தனையில் நம்மால் ஆவதென்ன பராபரமே என்ற பஜனைப் போக்கு ஏற்பட முடிவதில்லை.

❊

நாட்டைத் திருத்தும் ஆற்றல் இளைஞர்களின் உள்ளத்திலே தேங்கிக் கிடக்கின்றது. மாணவமணிகள் அறையிலே மலர்ந்து வீசிய புரட்சி வாடையிலிருந்துதான் பல நாடுகள் உயர்வடைந்திருக்கின்றன.

❊

சூதுமதியினரை அடக்க, சொந்த மதியற்றோர்க்கு அறிவு புகட்ட, சுரண்டுபவனை அடக்க, சோர்ந்திருப்பவனுக்கு உரம் ஊட்ட, பஞ்சம் வராமல் தடுக்க, படிப்பைப் பரப்பித் தொழிலை வளர்க்க, படுகுழிகளை மூட, பாதைகளைச் செப்பனிட, எண்ணப்

போனால் மளமளவென்று பலப்பல வேலைகள் தெரியும் மனக்கண்முன். இவைகளைச் செய்யும் மனஉறுதி தான் வாலிபர்களுக்கு வேண்டும். செய்வதைத் திருந்தச் செய்யும் நல்ல பண்புதான் வேண்டும்.

## பெண்கள்

பெண்கள் களங்கமற்றுக் கலகலவெனச் சிரித்துக் கொண்டிருக்க வேண்டும். சுடு மூஞ்சியாக இருக்கக் கூடாது. ஆனால், அச் சிரிப்பு சிலந்திக் கூடாக இருக்கக் கூடாது.

வெங்காயச் சாறு கண்ணிலே பட்டால், விழியில் நீர் வழிவது போல, பெண்களின் கோப உணர்ச்சியும், பழிவாங்கும் எண்ணமும் கிளப்பிவிட்டு விட்டால் எந்த ஆணும் அழுது கொண்டுதான் இருக்க வேண்டும்.

வயோதிகரை மணந்து வேதனையுடன் போரிடும் புனிதவதிகளின் விழிகளிலே வழிந்தோடிய நீர் இந்த நாட்டையே அரித்து வருகிறது.

ஒரு இளமங்கையைக் கிழவனுக்குக் கல்யாணம் செய்வதென்பது, அவள் வாழ்க்கையைச் சித்திரவதை செய்வதாகும்.

அழகு களிப்பதற்கு எங்ஙனம் உதவுகிறதோ, அதைப்போலவே பிறரை அழிக்கவும் செய்கிறது. எனவேதான் புலவர்கள், மாதர்களின் விழியிலே அமுதமும் உண்டு, நஞ்சும் உண்டு என்றனர்.

*

சொத்து, சுதந்திரங்கள் அனைத்தையும் ஆணுக்குக் கொடுத்துவிட்டு சயனக் கிருகத்தில் சாயும் நிலையை மட்டும் பெண்ணுக்குத் தருவது ஒரு குடும்பத்தின் மணிகளிலே ஒன்றை மாணிக்கமாக்கி விட்டு மற்றொன்றை மண்ணாங்கட்டியாக்குவது போன்ற காரியம்தானே! செய்யலாமா?

*

ஆளப்பிறந்தவன் ஆண்மகன். அவன் இஷ்டத்துக்கு ஆடிப் பிழைக்க வேண்டியவள் பெண்மகள். இப்படிப் பேசிடும் பண்பு இருக்கும் வரை நம்நாடு உருப்பட முடியுமா?

## காதல்

காலம், விளைவு முதலிய எதனையும் பொருட்படுத்தாது திடீரென்று கிளரும் ஜோதியன்றோ காதல்!

இளமைப் பருவத்தைத் தட்டி எழுப்பி வளர்வதற்கான காரணச் சக்தி காதலின் வல்லமையாகும். மக்களின் வாழ்வின் இன் [illegible] சுவையை மிகுந்த திர்

காலத் திட்டம் போடுவதும் காதலின் சக்தியே யாகும்.

❋

ஒரு பெண்ணின் புன்னகை, ஆடவன் மனத்தைப் படுத்தும் பாடு, அனுபவித்தவரே அறிவர்.

❋

இரு கண்கள் இருதயத்தை எவ்வளவு பாடு படுத்தி விடுகின்றன. அந்த இதழ், கிடைப்போருக்குத் தரும் இன்பம் எத்தனை! கிடைக்கப் பெறாதவர்க்குத் தரும் இன்னல் எவ்வளவு?

❋

தான் கோரும் மாதின் ஓடைக் குளிர் பார்வைக் காக ஓராயிரம் வீரர்களை ஒருங்கே எதிர்க்கவும் உள்ளம் இடம் கொடுக்கும்.

❋

நெஞ்சிலே புகுந்த நேரிழையாளை நீக்க வேண்டு மானல் நெஞ்சையே நீக்க வேண்டும்.

❋

விண்ணும், மண்ணும் அதிர வெறியாட்டமாடி வரும் விரோதிக் கூட்டத்தைக் கண்டுங் கலங்காத வீரன், வேல் விழியாள் முன்பு வீழ்ந்து விட்டதற்குச் சரித்திரத்தில் ரசமான சம்பவம் ஆதாரமாக உண்டு. வாள் வீச்சுக்கு அஞ்சாத வீரன் கன்னியின் கடைக் கண் வீச்சால் வீழ்ந்ததுண்டு.

சூரியனுக்குத் தெரிகிறதா தாமரை தன்னிடம் லயித்தே மலருகிறது என்ற உண்மை. ஏன், மேகத்துக்குத் தெரியுமா மயிலின் நடனத்துக்குக் காரணம் தன்னிடம் அப்பறவை கொண்ட காதல் என்று.

❋

ஒரு பெண்ணைக் கண்டு ஒருவன் மோகிக்கலாம். என் வாழ்வின் மலர் இவள் என்று கருதலாம். மணந்தால் இவளையே மணப்பேன் இல்லாவிடில் உயிர் துறப்பேன் என்று கூறலாம். ஆனால் அவன் காதலிக்கும் பெண் அவனை விரும்பாவிடில் சாஸ்திரப் பொருத்தம், குடும்பப் பொருத்தம், கோத்திரப் பொருத்தம் எது சரியாக இருந்தாலும் அந்தப் பெண்ணின் மனப் பொருத்தம்தான் அதி முக்கியமானதாகக் கருதப்பட வேண்டும்

❋

(உண்மையான அன்பு கனிந்திருந்தால், ஒரு காரிகை தன்னைக் காதலன் நோக்கும் போது, தலை குனிந்து நிற்பாள். கண் சரேலென்று பாயும், காதலன் மீது. நொடியில் மூடிக்கொள்ளும். இடையே ஒரு புன்சிரிப்பு மின்னலெனத் தோன்றி மறையும்.)

## திருமணம்

மணம் செய்வது மாடு பிடிப்பதுபோல இருக்கும் வரை வாழ்க்கையின் முழு இன்பத்தையும் நுகர முடியாது.

எந்தக் காரணங்களைக் கொண்டு பார்த்தாலும் நாம் சீர்திருத்தத் திருமணம் நடத்தும் முறை தவறு என்று எடுத்துக் காட்டவோ அல்லது பழைய முறை தான் சரி என்று வாதிடவோ ஒருவராலும் முடியாது.

❋

சுயமரியாதைத் திருமணங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் நடக்கத் தொடங்கி விட்டால், நாட்டிலே பரவிக் கிடக்கும் மூடக் கொள்கைகள் தாமாகவே சீந்துவாரற்றுப் போய்விடும்.

❋

திருமண முறையில் எவ்வளவோ மாறுதல் ஏற்பட்ட பின்னரும் ஒரு முக்கியமான மாறுதல் ஏற்படாமலே இருந்தது. அதாவது, மணமகன், தனக்கு ஏற்ற மணமகளையோ, மணமகள் தனக்கு ஏற்ற மணமகனையோ தாங்களாகவே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தமிழர் திருமண முறைக்குப் பெற்றோர்களும் உறவினர்களும் தடையாய் இருந்து, அவர்கள் அந்தக் காரியத்தைச் செய்து வந்தனர். இப்போதும் பல இடங்களில் இந்த முறைதான் கையாளப்பட்டு வருகின்றது என்ற போதிலும், கால மாறுதலும், நம் இயக்கத்தவரின் ஓயாத உழைப்பும், இந்தத் தவற்றையும் திருத்திக் கொண்டுதான் வருகிறது.

❋

வீட்டிலுள்ள கஷ்டத்தினால் கழுத்தில் அணியும் நகையை விற்றுவிட்டால், வாங்குகிறவர்கள் விற்றவர்களின் வாட்டத்தை எதற்காக கவனிக்கப் போகிறார்கள். அந்த நகையைத் தாங்கள் அணிந்து

கொண்டால் அழகாக இருக்கும் என்ற எண்ணம் மட்டும் தானே இருக்கும். அதைப்போலவே, மங்கை மன வாட்டம் கொண்டாலும் தனக்கு மனைவியானல் அல்லவா அதுதான் குமரியை மணக்கும் கிழவனின் எண்ணம்.

☀

திராவிடர் கழத்தில் இருந்த பொழுது நாம் சீர்திருத்த திருமணங்களை ஆதரித்தோம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் சீர்திருத்த திருமணங்களை அதிகம் செய்து வைத்தோம். இப்போது ஆளுங் கட்சியாகி விட்டோம். சீர்திருத்தத் திருமணங்களை சட்டபூர்வமாகச் செல்லுபடியாக்க ஆலோசித்து வருகிறோம். என்றாலும் நீச்சல் தெரிந்து கொண்டுதான் தண்ணீரில் இறங்க வேண்டும் என்பது போல, சட்டம் வரட்டும் சீர்திருத்த திருமணம் செய்யலாம் என்று மக்கள் இருக்கக் கூடாது.

## மதம்

'ஐம்புலன்களை அடக்கு' பொருள்களின் மீது மிகுதியாக ஆசை வைக்காதே என்றெல்லாம் மதவாதிகள் எழுதிப்போட்டிருப்பதைக் காண்கிறேன். இந்த உண்மைகளை எல்லாம் உண்மையிலேயே உலகில் உள்ளோர் அறிந்து உணர்ந்திருப்பாரேயானல் சண்டைசச்சரவுகள் ஏற்பட்டிருக்காது; ஐக்கியநாடுகள் மன்றமும் தேவைப்பட்டிருக்காது.

மனித சமுதாயத்தை வழி நடத்தும் மார்க்கங்கள் எல்லாம் நான்கு மாடிக் கட்டிடங்களாக உள்ளன என்றாலும் இரண்டு மூன்று மாடிகளுக்குத்தான் ஒழுங்கான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது மாடியிலிருந்து அடுத்த மாடியைப் பார்த்தால் தொங்குகிற நூல் ஏணியில் ஏறிச் செல்லவேண்டிய நிலை இருக்காது.

புத்தர் சொன்னார், சித்தர் கூறினார்—மகா வீரரும் முகமது நபியும், காந்தியடிகளும், இராமலிங்க அடிகளும் சொன்னார்கள் — என்றுதான் சொல்கின்றோமே தவிர, அவற்றைச் செய்து காட்டுகின்றோமா? — அவர் அப்படிச் சொன்னார், — இவர் இப்படிச் சொன்னார் என்று கூறிவிட்டு, நீ என்ன செய்யப்போகிறாய் என்றால் விழித்து நிற்போரைத் தான் நாம் பார்க்கின்றோம். ஆகவேதான் சொல்லுவதோடு மட்டும் நில்லாமல் செய்தும் காட்ட வேண்டும், அப்போதுதான் அந்த நன்னெறிகளை உணர்ந்தவர்கள் ஆவோம்.

ஒரு மரத்தின் பலன் எப்படி அதன் கனியைப் பொருத்திருக்கிறதோ, அப்படித்தான், ஒரு மதத்தின் பலன் அதைப் பின்பற்றும் மக்களின் நடவடிக்கைகளைப் பொறுத்திருக்கிறது.

பூமியிலே புரண்டு கோவிந்தா போடுவதும், வேல் குத்திக் கொண்டு வேலாயுதா என்று சொல்லுவதும்

பக்தி என்று சொல்லப்படுமானால், பக்தி என்ற சொல் லுக்குப் பைத்தியம் என்பதாக இருக்க வேண்டும் அல்லவா?

## ஜாதி

சாதிமுறை, சடங்கு முறை என்பனவெல்லாம் தந்திர மாக அமைக்கப்பட்ட பொருளாதார சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே சாதி முறையை ஒழிப் பதும், சமதர்ம திட்டம்தான்.

இங்குள்ள சாதித்திமிரைக் கண்டிக்க முன் வராத வீரர்கள் தென்னாப்பிரிக்காவில் உள்ள நிறத்திமிரைக் கண்டிப்பது, மகத்தான குடியன் மதுவிலக்குப் பிரச் சாரம் புரிவது போன்ற செயல் தவிர வேறென்ன?

சாதி முறையை நாம் எதிர்க்கிறோம் என்றால், பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும் நிலைத் திருக்கச் செய்வதுமான கொடிய ஏற்பாட்டைத் தகர்க்கிறோம் என்று பொருள். அதாவது சமதர்மத் திற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறோம் என்று அர்த்தம்.

சாதிகள் இருந்தாக வேண்டும் என்று எண்ணு பவர்கள், எவ்வழி உலகம் செல்கிறது என்பதை அறியாத ஏமாளிகள். காலத்தின் தாக்குதலை கயவரின்

தாக்குதல் என்றும், பகுத்தறிவின் வேகத்தைப் பாப காரியம் என்றும் தவருகக் கருதும் பக்குவமற்ற வர்கள்.

❋

மாவீரர்கள், மாபெருந் தலைவர்கள் என்போர் சாதிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் திணறுவது கண்டு சாதி சிரிக்கிறது. ஆனல் அந்தச் சிரிப்பு வெற்றிச் சிரிப்பல்ல — வேதனைச் சிரிப்புமல்ல — கேலிச் சிரிப்பு. — ஆனல் அந்தக் கேலியுடன் சிறிது சிரிப்பும் கலந்திருக்கிறது.

❋

காலமெனும் வீரன் அறிவெனும் சம்மட்டி கொண்டு அடித்து நொறுக்குகிருன் சாதி இச் சாபத்தை, இனி சாதீயம் பிழைத்துக் கொள்ள முடியாது. காலம் தரும் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அதற்குக் கிடையாது.

❋

சாதியினல் விளையும் கேடுகளை அறிய முடியாத பாமரர்களைவிட, அதனை அறிந்திருந்தும், தமக்குச் சுக வாழ்வு கிடைத்திருக்கிற சாதி இருப்பதனல் என்ற காரணத்துக்காக, சாதி முறையைத் தங்கள் செல்லப் பிள்ளையாகக் கொள்ளும் படித்தவர்கள்தான் மிகப் பொல்லாதவர்.

❋

ஓநாய்க்கு இரத்தபானத்தில் சுவையிருக்குமட்டும் ஜீவகாருண்யத்தை அது வெறுக்கத்தானே செய்யும்?

அதுபோலவே, சாதி பேதமும் பல காலமாக இலாபம தரும் சாதனமாக இருப்பதால் அதற்குச் சாகா வரம் கோரத்தானே செய்வர், அதனால் இலாபம் பெறு பவர்கள்.

## மூட நம்பிக்கை

அறையில் இருந்தபடி ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருக்கும் சீமையில் பாடப்படும் சங்கீதத் தைக் கேட்கிறோம் வானொலி மூலம். இது அதிசய மாகத் தெரியவில்லை நம்மவர்கட்கு. மாரி கோயில் பூசாரியின் மந்திரம்தான் அதிசயமாகத் தெரிகிறது காரணம்? மூட நம்பிக்கை

❋

தசரதன் வீட்டில் டெலிபோன் இருந்ததில்லை, ஸ்ரீ ராமர் ரேடியோ கேட்டதில்லை. சிபி சினிமா பார்த் ததில்லை. ஆனால் நம் காலத்தில் இவைகள் அத்தனை யும் இருக்கின்றன. ஆனாலும் சிலர் கூறுகின்றனர். காலம் கெட்டுவிட்டதென்று; கூறலாமா?

❋

கடிகாரத்தை கவனித்து நடக்கிற மேனாட்டினர் முன்னேற்றத்தின் உச்சியில் இருக்கின்றனர். பஞ்சாங் கத்தைப் பார்த்து வாழ்கிற நாம் பின்னேற்றத்தின் கடை கோடியில் இருக்கிறோம்; வேறெங்கே இருக்க முடியும்?

❋

சனாதனச் சேற்றை விட்டு நம் மக்கள் இன்னமும் வெளியேறாதது மட்டுமல்ல, பலருக்கு இன்றும் அந்தச்

சேறு சந்தனமாகத் தெரிகிறதே, அதை எண்ணும் போதுதான் துக்கம் மட்டுமல்ல, வெட்கமும் நமக்கு உண்டாகிறது.

வியாசர் கூப்பிட்டபோது உலகம் வரவில்லை. நாம் கூப்பிட்டால் ரேடியோ மூலம் உலகமே நம் முன் வந்து நிற்கிறது. எதனால் ஏற்பட்டது, இந்தத் திறமை நமக்கு? பக்தியாலா, இல்லை, பகுத்தறிவால்.

எந்தக்காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக்காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா, என்றுதான் நாம் பார்த்து பின்பற்ற வேண்டுமே தவிர அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக் கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

பழம் அழுகுவது போல—மலர் கசங்கி மணத்தை இழந்து, பிறகு கெட்ட வாடை கொள்ளுவது போல—தழை, சருகு ஆவதுபோல பலப் பல தத்துவங்களும் ஏற்பாடுகளும் காலச் சிறையிலே கிடந்து கிடந்து கெடுவதும் பல கேடுகளை உற்பத்தி செய்வதும் இயற்கையாக ஏற்படும் ஒரு நிகழ்ச்சி — இதனை உணர மறுப்பது உலகை அறியாதோர் போக்கு.

தேளையும் பாம்பையும் உலகம் ஒழித்துவிட்டது? அதுபோல் கொடிய வழக்கங்களையும் ஒழித்துவிடத்

தான் இல்லை. துஷ்ட ஜந்துக்களைக் கண்டால் கொல்வார்கள். துஷ்ட வழக்கங்களையோ இந்த நாட்டிலே துதிக்கிறார்கள்.

❋

நாதர்முடி மேலிருக்கும் வெண்ணிலாவே - என்று பாடத்தில் வரும். அதை விளக்கும் ஆசிரியர்— பத்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்தால் — பரமசிவனின் சடாபாரத்தில் பிறை இருந்தது—கங்கை ஓடியது என்பார். இப்போது பிறை இருப்பதாகவும். கங்கை ஓடுவதாகவும் புராணிகர்கள் கூறுகின்றார்கள் 'என்று ஐயத்துடன் கூறுவார்'. இன்னும் பத்து ஆண்டுகள் போகட்டும் அப்படி இருப்பதாகப் புலவர் கற்பனை செய்துள்ளார் என்றுதான் பொருள் சொல்லுவார். அப்படி அவர் பொருள் கூறவில்லை என்றாலும் மாணவர்களிடம் ஆசிரியர் சமாளிக்கமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, வேண்டாத பழயனவற்றை அகற்றவும் தேவையான புதுமைகளைக் கைக் கொள்ளவும் கற்றுக் கொள்ளவும் வேண்டும்.

❋

எங்கோ ஓர் குக்கிராமத்திலே குறி கூறுவான் ஒரு தந்திரக்காரன். அங்கே கும்பல் கூடும். அதற்கு அருகே அரியதோர் இயற்கைக் காட்சி இருக்கும். கண்டோர் மனதைக் களிப்புறச் செய்யக்கூடிய விதமாக — காண யாரும் வரார்!.

❋

இந்த உலகத்திற்கும் மேலுலகத்திற்கு மிடையே பாதை அமைப்பதில் நம் முன்னோர்கள் முனைந்திருந்

தார்களே தவிர உழைப்புக்கும் வாழ்வுக்குமிடையே பாதை அமைக்கவில்லை. எனவேதான் இன்றளவும் இடரும் இருளும் நிரம்பியதாக உள்ளது மக்கள் வாழ்க்கை.

❋

ஏழைகளை வஞ்சிக்க ஓர் ஏற்பாடு. அதற்குப் பெயர் மதம். உழைக்கிறவனை ஒடுக்குவதற்கு ஒரு இயந்திரம்— அதற்குப் பெயர் சாதி — பகற்கொள்ளை அடிப்பதற்கு ஒரு திட்டம்.— அதற்குப் பெயர் பூசை, சடங்கு, தட்சணை.

❋

ஆத்ம சக்தியிலே ஆழ்ந்த நம்பிக்கை கொண்ட காந்தியாருக்குக் கூட நோய் கண்டபோது, ஆத்ம சக்தி அல்ல, ஆறு டாக்டர்கள்தான் அவசியமாகத் தேவைப்பட்டனர். ஏன்? அதைத்தான் கொஞ்சம் உங்களைச் சிந்திக்கச் சொல்லுகிறேன்.

## மாற்றுக் கட்சித் தலைவர்கள்

உலகிலே பல பல தீவிர வாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் எனக்குத் தெரியும். நாத்திகம் பேசிய நாவலரையும் நானறிவேன். நெருப்பாறு தாண்டும் வீரரும் எனக்குத் தெரியும். ஆனால் அவர்களுக்கும் பெரியாருக்குமுள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை உணர வேண்டுகிறன்; அவர்கள் படித்த பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர். அவர்களுக்கு எழுதினர். பெரியாரின் பணி,

தற்குறிகள் நிரம்பிய தமிழகத்திலே கல் வீச்சு, மண் வீச்சுக்கிடையே என்பதை அறியவேண்டும்.

முதன்முதலில் இந்தி கூடாது என்று போராட்டம் நடத்தியபோது நீண்ட புகழ்கொண்ட நெடிய உருவத்தினரான முத்தையா செட்டியார், சென்னை தங்கசாலையிலிருந்து ஐலண்டு மைதானம் வரையில் தூக்கிக் கொடுத்த தமிழ்க் கொடியை தோளின்மீதே சுமந்து வந்தவர் ஆவார்.

அவர் காங்கிரஸ் கட்சிக்குச் சென்றுவிட்ட போதிலும், மொழிப் பிரச்சனை வந்தபோது தமிழ் மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் ஆதரவு காட்டத் தவறியதில்லை.- இந்தி மொழியின் ஏகாதிபத்தியத்தைக் கண்டிக்கத் தவறியதில்லை.

காந்தீயத்தோடு காங்கிரசைச் சேர்த்து எண்ணுவது வாழ்க்கை. ஆனால் அந்தக் காங்கிரசிலிருந்து மாறுபட்ட எதிர்கட்சிகளும் காந்தீயத்துக்கு மரியாதை காட்டுவதுதான் பெருமை உடையது. ஏனென்றால் காந்தீயம் இப்போது தத்துவம் ஆகி விட்டது. அது அரசியலுக்கு அப்பாற்பட்டது.

காமராசர் படிக்கவில்லையே தவிர, கல்லூரிகளில் நான் படிக்கவில்லையே என்ற ஏக்கம் கொண்டவர். அவர் படித்துப் பட்டம் பெறவில்லையே தவிர, படிக்

கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. அவர் வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார். மக்களின் புன்னகையை — பெருமூச்சை — கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்.

❋

காமராசர் படத்தை ஒரு காங்கிரஸ்காரர் திறந்து வைத்து அவருடைய அருமை பெருமைகளைப் பாராட்டிப் பேசினால் அது அவரது கடமையாக இருக்கலாம் — அல்லது பெறலாம் என்ற ஆசை காரணமாக இருக்கலாம். நான் அவர் படத்தை திறப்பது பெற்றதற்காகவும், அல்ல பெறலாம் என்பதற்காகவும் அல்ல! எங்களிடையே கருத்து வேறுபாடு இல்லை என்பதைக் காட்டவும் அல்ல! அவர் படத்தை நான் திறக்கிறேன் என்றால் அவர் தமிழகத்துக்கு நன்மை செய்தார் என்பதற்காக.

## மே நாள்

பாட்டாளிகள் போராட்ட முயற்சியின் இடையிலே ஓர் நாள் ஓய்வு பெற்று நின்று, சென்ற கால வருங்காலக் கணக்கைப் பார்க்கும் திருநாள் மேநாள். சென்ற காலங்களில் மகத்தான வெற்றிகளைக் காண முடியாவிட்டாலும் கண்ட சிறு சிறு வெற்றிகளை நினைத்து, மகிழ்ந்து உள்ளத்தை ஊக்குவித்துக் கொள்ளவும், வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்கள் குறித்து எண்ணி, செயலாற்றும் நெறியிலே உறுதி கொள்ளவும் மேநாள் பயன்படுகிறது.

மே முதல் நாள்! மேதினி எங்கும் கொண்டாடப் பெறும் மே விழா நாள்! அலாஸ்காவிலிருந்து ஆஸ்திரேலியா வரையிலுள்ள பற்பல நாடுகளின் மூலை முடுக்குகளிலெல்லாம் மே நாள் முழக்கம் இன்று ஒலிக்கப்பெறும். பாடுபட்டு உழைத்துப் பலன் காணாது தவித்திடும் பாட்டாளியின் குரல் எங்கணும் எக்காளமிட்டு நிற்கும்.

✻

"புதியதோர் உலகம் செய்வோம் — கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்ற பெரு முழக்கம் உலகத் தொழிலாளர்களின் உள்ளங்களிலிருந்து இன்று வெளிக் கிளம்பட்டும்! அதனால் ஏற்படும் மகிழ்ச்சி எங்கும் மலரட்டும் அந்த மலரினின்றும் வீசும் இன்ப மணம் எங்கும் கமழட்டும்.

## ஏழை

ஏழையின் வியர்வை சிந்தாமலே பூமிக்கு அடியில் தூங்கிக் கொண்டிருக்கும் வைரமும், தங்கமும் கடலுக்கு அடியிலே படுத்துறங்கும் முத்தும் எப்படிக் கிடைத்தது? ஏழையின் கைத்திறன் இல்லாத பண்டம் உண்டா?

✻

பரம்பரை பரம்பரையாக ஏழைகள் முதுகு மீது ஏறிச் சவாரி செய்து வந்தோமே, இனியும் செய்வோமே என்று முதலாளிகள் எண்ணக் கூடாது ஏனெனில் இக்காலக் குதிரைகள் கொஞ்சம்

இடக்குப் பண்ணிக்கொண்டு வருகின்றன. முன்போல இல்லை.

✷

பனியிலே குளிர் உண்டாகிறது. வெயில் உடல் எரிச்சலைத் தருகிறது. வறுமையும் அப்படித்தான். அதை அனுபவிப்பவர்களுக்கு வேதனையை ஊட்டி அவர்களின் இயற்கையை மாற்றி அவர்களைக் குமுறும் எரிமலைகளாக ஆக்கிவிடுகிறது.

✷

சீமான்களில் சிலருக்குக்கூட சிற்சில சமயங்களில் ஏழையின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்கின்ற ஆசை வருவதுண்டு—ஆனால் அந்த ஆசை நிறைவேறுவதில்லை. பிரபுக்களின் பட்டுத் துணிகளுக்கு ஏழையின் கண்ணீரைத் துடைக்கும் ஆற்றல் கிடையாது.

## முதலாளி

முதலாளி எப்படி உற்பத்தியாகிறான்? எதனால் ஒருவன் முதலாளியாகிறான்? இதற்குச் சுருக்கமான பதில் தனிப்பட்ட மனிதன் லாபத்தால் முதலாளியாகிறான். இன்னும் கொஞ்சம் விளக்கமாக, மார்க்ஸ் கூறுகிறபடி பார்த்தால் தொழிலாளிகளின் உழைப்பை முதலாளி திருடிக் கொள்கிறான். ஆகவே அவன் முதலாளியாகிறான்.

✷

ஏழையின் வயிற்றிலடித்துத் திருடிய பணத்தை உருட்டி வைத்துக் கொண்டிருக்கும் செல்வந்தர்கள்

பணத்தை பகுத்தறிவிற்கோ பயன்தரும் பணிக்கோ செலவிடும் திருந்திய மனம் உடையவர்களல்ல. போக போக்கியத்துக்கும், போகிற கதி நல்லதாக இருக்க வேண்டுமே என்பதற்காகவும் மட்டுமே பணத்தைச் செலவிடுவார்கள்.

பொது மக்களின் சக்தியிலும் குணத்திலும் சந்தேகம் பிறப்பது ஓர் வகை நோய்—அது மாளிகை வாசிகளுக்கு எப்போதுமே இருக்கும்.

ஏர் கொண்டு உழைத்தவர்களை என்றென்றும் ஏழைகளாகவே வைத்திருக்க முடியுமென்றெண்ணி அவர்களைப் போருக்கு அழைக்கின்றனர், பிரபுக்கள் விளைவு என்னவாகும்? வரலாறு கூறும், நாம் கூறுவானேன்!

வாழ்க்கைத் தேவைகள் அனைத்தையும் அனைவராலும் பூர்த்தி செய்து கொள்ள முடிவதில்லை. இல்லாமை அல்ல இதற்குக் காரணம், செல்வத்தைப் பெருக்கிடும் சாதனம் சிலரிடமே சிக்கி விட்டதால் ஏற்பட்டுள்ள சீரழிவுதான் காரணம்.

## விவசாயம்

தானே பயிரிட்டு வரும் சொந்த நிலம், தாய்ப் பால் குடித்து வளரும் குழந்தைபோல. நமது நிலத்தை

கூலிக்கோ, வாரத்திற்கோவிட்டுப் பயிர் செய்வது தாதியிடம் பால் கொடுக்கச் செய்வதோ அல்லது தகர டப்பாவில்வரும் தயாரிப்புப் பால் கொடுத்தோ வளர்க்கப்படும் குழந்தை போலத்தான். வளராது என்று அர்த்தமில்லை—வளரும்; ஆனால் வாளிப்பாய் கலந்திருக்க முடியாது.

உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானால் வயலிலே வளம் காண முடியாது.

நூற்றுக்கு எழுபத்தைந்து பேர் இந்த நாட்டில் விவசாயிகள். மீதி இருக்கும் இருபத்தைந்து பேரும் விலை கொடுத்து வாங்குபவர்கள். அந்த இருபத்தைந்து பேருக்குத்தான் நாம் உணவு கொடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். அதற்குரிய நடவடிக்கை எடுத்து, விலையைக் குறைப்போம்.

பண்ணைக்காரர்களிலே பல புண்ணியவான்கள் இருக்கிறார்கள்—மிலாறும் கையுமாக இருப்பவர்கள், கம்பத்திலே கட்டி அடித்துவிட்டுக் கணக்குக் கேட்பவர்கள்! இப்படிப்பட்டவர்களிடம் விவசாயம் இருக்கும்வரை விளைவு எப்படி அதிகமாகும்?

பாடுபடுபவன் ஒருவன்—பட்டா உரிமை பெற்றவன் வேறொருவன். உழுது பயிரிட்டு அறுவடை செய்பவன் ஒருவன்—அறுவடைக்குப் பிறகு அளந்து

பார்த்து அகமகிழ்வான் வேருெருவன். இந்த நிலை இருக்கும்வரை சங்கடம்தான் விளையும், இந்தியாவின் சஞ்சலங்கள் தீராது.

✹

நிலமற்ற விவசாயி, உழைக்க வராத பண்ணை முதலாளி, இப்படி இரு சாரார் இருக்கு மட்டும் நாட்டில் செல்வ நிலையும் உயராது. விவசாயமும் செழிக்காது.

✹

சலிப்பும், சோகமும் நிரம்பிய விவசாயி ஒரு புறமும் அதிகாரமும் ஆணவமும் கொண்ட நிலப் பிரபு மற்ருேர் புறமும் இவர்களுக்கிடையில் நிலம் சிக்கிக் கொண்டிருந்தால் விவசாயம் எப்படி வளமாக முடியும்!

## ரஷ்யா

சோவியத் அரசு — சோவியத் நாடு என்ற சொற்களை உச்சரிக்கும் போதே மனித உள்ளத்தில் ஏதேதோ வசீகரமான உணர்வுகளை அவை தூண்டி விடுகின்றன.

✹

சோவியத் அரசு—உலகத்தில் சாந்தம் நிலவிடவும் சமாதானம் அரசு செய்யவும், மிகுந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டிருக்கிறது என்பதை மறுக்கிறவர் ஒருவரும் இருக்க முடியாது. தங்களைத் தாங்களே மறுக்கிறவர்கள் தவிர வேறு யாரும் மறுக்க மாட்டார்கள்.

நவம்பர் ஏழாம் நாள். மதுக் கிண்ணங்கள் கீழே வீழ்ந்தது. மங்கையரின் மலரடியை வருடிக் கொண்டிருந்த மதிகேடர்களின் மாளிகைகள் அதிர்ந்து கொடுங்கோலர்களின் குலை நடுங்கிய நாள். சீமான்கள் சாய்ந்த நாள். ரஷ்யா புதுவாழ்வு பெற்ற நாள்.

❋

உலகெங்கும் மனிதனை மனிதன் நாகரிகத்தின் பேரால் சுரண்டுவதையும் சுரண்டப்படுபவன் சூட்சமத்தை தெரிந்து கொள்ளாமல் இருப்பதையும் கண்டு ரஷ்யா சிரிக்கிறது. ஏனெனில் அங்கு சுரண்டல் தொழில் ஒழிந்து விட்டது.

❋

முதலாளித்வம் என்னும் கொந்தளிக்கும் கடலிலே சிக்கித் தவித்த அரசு எனும் மரக்கலத்தை அமைதி—ஆனந்தம் என்னும் துறைமுகத்திலே வந்து தங்குமாறு அழைத்த கலங்கரை விளக்கு—சோவியத் ரஷ்யா.

❋

பழமை ஓடிற்று—புதுமை ஓங்கிற்று. வஞ்சகம் அழிந்தது. சமரசம் சிரித்தது. ஏழையின் கண்ணீர் நின்றது. ஏய்த்துப் பிழைப்போரின் குருதி ஆறெனஓடிற்று. ஆம்! ரஷ்யாவில்! நவம்பர் 7-ல்! அந்த நாள்தான் புரட்சித் திருநாள்—புது வாழ்வுப் பெருநாள்.

❋

சோவியத் மக்களின் இரத்தத்தை எண்ணெய்யாக ஊற்றி, அவர்களின் நரம்புகளைத் திரியாக அமைத்து,

இலட்சியம் என்னும் தீக்குச்சி கொண்டு புரட்சி வீரர் லெனின் ஏற்றி வைத்த புது விளக்கு மாஸ்கோ.

✻

மாதா கோவிலின் மணியோசை, பூசாரிகளின் அர்ச்சனை, பக்தர்களின் பாசுரம் — வேதாந்திகளின் விருத்தம், கலைவாணர்களின் கவிதை எதுவும் மாற்றவோ அழிக்கவோ முடியாததால் ஓங்கி வளர்ந்திருந்த ஏழ்மை எனும் விஷவிருட்சம் ரஷ்யாவில் கீழே வீழ்ந்த நாள்தான் நவம்பர்—7.

✻

## ஓய்வு

ஓய்வு உயர்ந்த பண்புள்ள நண்பன் மூலம் நாம் என்ன பெறமுடியுமோ அவ்விதமான மனமகிழ்ச்சியைத் தருவதாக அமைத்துக் கொள்ள வேண்டும். அது இன்றுள்ள சமூக பொருளாதார அமைப்பு வரையில் சாத்தியமாகுமா என்பது மிகமிகச் சந்தேகம்.

✻

அலுத்துத் தூங்கும் ஆலைத் தொழிலாளியிடம் ஓய்வின் உயர்வைப் பற்றிப் பேசுவது, ஓய்வை எப்படிப் பயன் படுத்துவது என்று கூறுவது, மாளிகையிலே திமிர்பிடித்து உலவும் நாய் பணியாளைக் கடித்தது கண்டு, சீமான் இன்ன மருந்து

சாப்பிட்டால் நல்லது; ஆபத்து இராது என்று பணியாளுக்கு யோசனை கூறுவது போலாகும்.

❋

ஓய்வு நேரம் வேலை கிடைத்து அதிலே ஈடுபட்டு உள்ளவர்களுக்கு வேலை நேரம் போக மிச்சமிருக்கும் பொழுது, வேலை செய்யும் நிலையில் இல்லாதவர்களின் 'காலம்'—ஓய்வு அல்ல,—அது ஓய்யாரம். வேலை கிடைக்காததால் வேலை செய்யாது இருப்பவர்களுக்குக் கிடைத்திருப்பது 'ஓய்வு' அல்ல திகைப்பு; வேலை செய்யும் மனப்பான்மையற்றவர்கள் காலத்தைக் கொலை செய்வது 'ஓய்வு' அல்ல—அது சோம்பல். ஆகயாராவது ஒரு வேலையும் செய்யாது இருக்கும் போது அவர் ஓய்வாக இருக்கிறார் என்று கூறி விடுவது கூடாது.

❋

மாளிகையிலே சோம்பேறிகள் இருந்தால் கண்டனம் பிறக்காது; கொடுத்து வைத்தவர், அவருக்கு என்ன நிம்மதியான வாழ்க்கை என்று களியுரை தரப்படும். அவர் மான் வளர்ப்பார் பொழுது போக்குக்கு—மீன் வளர்ப்பார் அழகுக்கு—ஓய்வு அவருக்கு ஓராயிரம் சேட்டைகள் செய்ய இடந்தரும். புகழ்வர்—நாள் முழுதும் பாடுபட்டுப் பிழைக்க வேண்டிய ஓயாத உழைப்பாளியின் நிலை வேறு.

❋

# நீதி

வீரருக்கு அழகு எதிர்ப்படும் எத்தனை ஆபத்தையும் பொருட் படுத்தாது போரிடல். கோழைகளின் கொள்கை எதிர்ப்பு என்ற உடனே என்னாகுமோ நமது கதி என்று பயந்து, பதை பதைத்து பாதகச் செயலைச் செய்யத் துணிவது. முன்னையோர் முடிவில் வெற்றியும் பின்னையோர் இறுதியில் தோல்வியும் பெற்று வந்ததாலேயே இன்று உலகில் ஏதோ ஓரளவுக்காவது நீதியும் நேர்மையும் நிலைத்திருக்கின்றன.

இரவு மதுரமாயிருந்த பால், காலையிலே திரிந்து விட்டால் சாக்கடையில் சேருகிறது, மாலையிலே மாளிகைகளிலே மனோகரிகளின் கூந்தலுடன் கொஞ்சிய மலர் காலையிலே கசங்கியதும் வீசி எறியப்படுகிறது குப்பையிலே! பொருள்கள் மட்டுமல்ல, எண்ணங்கள், ஏற்பாடுகள். முறைகள், நீதிகள் எனும் எவையும் அப்படித்தான். காலத்துக்கு ஏற்றதாக நடைமுறைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்.

நீதி நீதி என்று கூறுகிறீர்களே, நீதி என்றும் நிலையுடையதா? நிகண்டுக்குள் கட்டுப்பட்டு நிற்கக் கூடியதா? அல்லவே அல்ல! ஒரு காலத்திய நீதி மற்றொருகாலத்தில் மாற்றப்படலாம். காலத்தையும் கருத்தையும் கொண்டு நீதி எது என்று அறுதியிட்டுக் கூற எவராலும் முடியாது.

# மனிதன்

மனிதன் பறக்கக்கூடக் கற்றுக் கொண்டான்! பார் முழுவதையும் பாக்கெட் சைஸ் ரேடியோவுக்குள் அடக்கி விட்டான். ஆனால், இன்னமும் பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லாரும் வாழ வழி கண்டுபிடிக்க மட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன் படவில்லை.

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரிது! அந்த இதயம் பண்புக்கேற்றபடி பெரிதாகத் தக்கது! நினைப்புக்கேற்றபடி குறுகத் தக்கது! ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன் படி நடக்க வேண்டும்.

அவதார புருஷனாகிய இராமனால் கண்டுபிடிக்க முடியாத ரயிலை, ஒரு சாதாரண மனிதனாகிய ஜேம்ஸ் வாட் தான் கண்டு பிடிக்க முடிந்தது. என்ன பொருள் இதற்கு? அவதார புருஷனாக இருப்பதைவிட சாதாரண மனிதனாக இருப்பது மேல் என்பதுதானே.

நமக்கு அறிவுரை கூறுபவர்கள் பலர் இருக்கலாம் மனத்திற்கு எத்தகைய இடையூறு வந்தாலும் தாங்கிக் கொள்கிற வலிவு இருக்கிறதா; அந்த வலிவை தயக்கம் காட்டாமல் பயன்படுத்துகிறோமா என்று பார்க்க வேண்டும். இதைக் கொண்டுதான்

த்னி மனிதனின் புகழ் மட்டுமல்ல, நாட்டின் புகழே நிர்ணயிக்கப்படுகிறது.

❊

## பாட்டாளி

பொதுநலம் பாட்டாளி ஆட்சியிலேதான் மலர முடியும். அந்த ஆட்சியின் வெற்றியினால் மட்டுமே உழைப்பு, ஊரழிக்கும் காரியமாகாது தடுக்கவும் விஞ்ஞானம் விபரீதத்தைப் பொழியாது நன்மைகள் பயக்கக் கூடியதாக அமையவும் வழி பிறக்கும்.

❊

வேலை மனிதத் தன்மையை மாய்க்காத அளவு இருக்கவேண்டும். வேலை நேரத்தை மட்டுமல்ல நான் குறிப்பிடுவது. வேலை முறை — தன்மை — வேலை செய்பவனுக்கு வேலை நேரத்தில் வேலைக்குத் தேவையான வசதிகளைத் தருவது எல்லாவற்றையும் சேர்த்து தான் கூறுவது.

❊

தொழிலாளரின் சக்தி அவிழ்த்து விடப்பட்ட நெல்லிக்காய் மூட்டைபோலக் கிடக்கிறது. சிதறுண்டு சின்னபின்னமாகிக் கொண்டிருக்கிறது. உருவாகும் உதயக்காட்சி தென்படவில்லை. கீழே முதலாளித்வம், மேலே ஜாதிக் கொடுமை. இரண்டுக்கும் இடையே அழுத்தப்பட்டு, விழிகள் பிதுங்க வேதனைப் பட்டுக் கொண்டு கிடக்கிறான் பாட்டாளி.

❊

பாட்டாளிகள் ஆலைத் தொழிலிலே ஈடுபட்டு சங்கம் அமைத்துக் கொண்டு கூலி உயர்வு, குடியிருக்கும் வீட்டு வசதி, சுகாதார வசதிகள் ஆகியவைகளுக்காக கிளர்ச்சிகள் நடத்துபவர்கள் மட்டுமல்ல, பண்ணை வேலைசெய்பவன், கல் உடைப்பவன், கட்டை வெட்டுபவன், குப்பை கூட்டுபவன் போன்ற சங்கமோ கிளர்ச்சி செய்யும் உணர்ச்சியோ கூட பெருமல் சிதறி வாழ்க்கையை சிதைத்துக் கொண்டுள்ள கோடிக் கணக்கான தொழிலாளரையே குறிப்பதாகும்.

❋

" இது என்ன முறை ஐபா! காலமெல்லாம் உழைக்கும் என்னை வறுமை வாட்டுகிறது! ஊரை மிரட்டி வாழும் உமக்கோ போக பாக்கியம் ஏராளமாக இருக்கிறது. இது நியாயமா?"— என்று ஏழை, சீமானைப் பார்த்துக் கேட்கும் முதல் கேள்விதான் புரட்சி ஆரம்ப அத்தியாயம்.

❋

## நடுத்தர மக்கள்

நடுத்தர மக்கள் ஊஞ்சலைப் போன்றவர்கள். அவர்கள் பயங்கரக் கிளர்ச்சிகளிலும் ஈடுபட முடியாது. பணக்காரர்களைப் போல ஆசை காட்டியோ மிரட்டியோ காரியத்தைச் சாதித்துக் கொள்ளவும் முடியாது.

❋

வண்டிக்குக் கடையாணி எவ்வளவு முக்கியமோ, அதுபோல் நடுத்தர மக்கள் அரசாங்கத்துக்கு முக்கிய மானவர்கள். கடையாணி வளைந்திருக்கிறது என்ருல், அதைச்சீர் படுத்தாமல் மாட்டுக்குக் கொம்பு சீவி வண்ணம் பூசிக் காட்டுகிருர்கள்.

❋

நடுத்தர வகுப்பினர், ஏழைகளுமல்ல, பணக்காரர் களுமல்ல இரண்டும் இல்லாதவர்கள். ஓரளவு ஏழை களைவிட வாழ்க்கை வசதி பெற்றவர்கள். ஆனுல் பணக் காரர்களாகி விடுவோம் என்ற ஆசையுடன் இருப் பவர்கள். அதே நேரத்தில் எங்கே உள்ளதும் போய் ஏழையாகி விடுகிருேமோ என்ற அச்சத்தோடும் கூடி யிருப்பவர்கள். இவர்கள் தான் இந்நாட்டில் நூற்றுக்கு அறுபது பேர்.

❋

## பன்மலர்ச் செண்டு

எவ்வளவு அலட்சியப் படுத்தப் பட்டாலும், ஏளனத்துக்கு ஆளாஞலும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற திடச்சித்தமும், விடா முயற்சியும் இருந்தால் வெற்றி கிடைத்தே தீரும். தூற்றினேரே துதி பாடி நிற்பர்; ஏளனம் பேசினேர் ஏத்தி ஏத்தித் தொழுவர்.

❋

பாழ்பட்ட மனம் பாலைவனத்துக்குச் சமமாகும். பாலைவனத்திலே, பயிரேது, மலர் ஏது? பாழ்பட்ட

மனதிலே சிந்தனைக்கு இடமேது? உரிமை உணர்ச்சி ஏது? எழவே முடியாது.

❋

ஒருவன் திறமைசாலியாக இருக்கலாம். ஆராய்ச்சியாளனாக இருக்கலாம். ஆனால் அவன் வெற்றி பெற அந்த வெற்றியினால் பலரும் நன்மை பெற யாரேனும் கருணையுள்ளம் படைத்த ஒருவர் அவருக்குத் தக்க சமயத்தில் கை கொடுத்து உதவ முன்வர வேண்டும். இல்லையேல் அவனுடைய திறமை காட்டு மலராகும் மீட்டுவாரற்ற வீணையாகும்.

❋

நட்பு நட்பைப் பெற்றுத் தரும் என்பார்கள்.

❋

ஒருவர் புகழடைந்த பிறகுதான் பாரட்ட வேண்டும் என்ற பண்பு எவ்வளவுக் கெவ்வளவு நாட்டில் குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது.

❋

உண்மையான ஜனநாயகம் இருக்கும் நாட்டில் தான் ஒரு கட்சித் தலைவரை இன்னொரு கட்சித் தலைவர் மதிப்பர். ஒரு கட்சித் தலைவர் படத்தை இன்னொரு கட்சித் தலைவர் திறந்து வைப்பார். ஆனால் சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவர் இன்னொரு தலைவரின் சமாதியைக் கட்டுவார்.

❋

கட்டையாலே கத்தியும் அட்டையாலே கேடையமும் செய்து பிடித்துக் கொண்டால் எதிரிக்குச் சிரிப்பு வருமா? சிந்தனை குழம்புமா?

✵

தொடர்பு தோழமைக்கு வழி தேடும். வழக்குக்கும் வம்புக்கும் இழுத்துச் செல்லக்கூடும். அண்ணன் தம்பிகள் ஒரு மனை வாழவும் முடியும். பாகப்பிரிவினைக்கு வழக்கு மன்றம் ஏறி அலுக்கவும் அவர்களால் முடியும்.

✵

அமைவது அமைக்கப்படுவதை விடச் சிறந்தது. பூத்திடும் மலர் போல் — பல வர்ணக் காகிதம் கொண்டு மலரைச் செய்திடலாம்—செய்யப்படும் பொருளிடம் மணமிராது.

✵

நாணய மதிப்புக் குறைப்பு என்பது அவசரமான தவறான முடிவு என்பதைக் காலம் கூறிவிட்டது.

✵

பிரதேச உணர்வும் நாட்டு உணர்வும் ஒன்றுக்கு ஒன்று இணைந்து செல்லலாமே தவிர நிச்சயமாக எதிர்த்துக் கொள்ள வேண்டும் என்பது இல்லை.

✵

உலகத்திலேயே நம்முடைய நாட்டில்தான் பெரும் பெரும் மகான்கள்—வழி காட்டிகள் தோன்றி இருக்கிறார்கள். இருந்தும் கூட நாம் உயர்ந்த நிலையில்

இல்லையே என்று சில சமயங்களில் நினைத்துப் பார்ப்பேன். இதுபோன்ற வழி காட்டிகள் தோன்றாத நாடுகளில் எவ்வளவோ முன்னேறி இருக்கின்றார்கள் — வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஆனால் வழி காட்டிகள் இருந்தும் அவர்கள் வழி நடத்திச் செல்பவர்களாக இருந்தும் நாம் முன்னுக்கு வரவில்லை. காரணம் நாம் சொல்பவர்களாகவே இருந்தோம் — செய்யத் தவறி விட்டோம். ஆகவே இனிமேல் சொல்வதுடன் செய்து காட்டவும் வேண்டும்.

முன்பு தரிசாகக் கிடந்த இடத்தை விளைநிலமாக்கி வியர்வை சிந்துவோர், குறை அளவு இயங்கி வந்த யந்திரத் தொழிற்சாலையை முழு அளவு இயங்கிடச் செய்யப் பாடுபவோர், மக்களின் வசதிப் பெருக்கத்துக்காக உர்பத்தி விநியோகம் ஆகியவற்றில் ஈடுபாடு அதனை நேர்மையான முறையில் நடத்திடுவோர் இவர்கள் எல்லாம் என் நண்பர்கள்—என் வணக்கத்துக்கு உரியவர்கள்.

கடலோரத்தில் வாழ்கின்றவர்கள்தான் உலக நாகரிகத்தோடு தொடர்பு கொள்ள வேண்டும். நாம் முப்புறமும் கடல் சூழ வாழ்கிறோம். தமிழகத்தில் எல்லாப் பக்கமிருந்தும் கடற்காற்று வீசிக்கொண்டிருக்கிறது. வங்காளம் — மராட்டியம் — தமிழகம் இந்த மூன்று பகுதிகள்தான் உலகப் பண்பாடுகளை உண்டாக்கியதாக இருக்கிறது. வேறெந்தப் பகுதியும் கடலோரத்தில் இல்லை. தப்பித் தவறி உத்தரப்

பிரதேசத்தை விட்டு காஷ்மீரத்துச்குப் போனதால் நேரு உலகப் புகழ் பெற்ருர். வேறு எந்த உத்தரப் பிர தேசத் தலைவரும் அந்த அளவுக்குப் புகழ் பெற முடிய வில்லை

எந்தப் பிரச்சனையிலும் பல அம்சங்கள் இருக்கும். பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கும். சனநாயக நாட்டில் அதுதான் இயல்பு. இப்படிப் பலதரப்பட்ட பக்கங்களை ஒரு முகப் படுத்தி அதில் நேர்மையானதைத் தேர்ந்தெடுத்து நல்ல முறையில் அதைச் செயல் படுத்த வேண்டும். இதுதான் பிரச்சனையைத் தீர்க்கும் வழியாகும்.

வெறும் முழக்கம் எழுப்புவதால் எதையும் சாதித்து விடமுடியாது. அதே நேரத்தில் முழக்கத்தால் பயனில்லை என்றும் கூற முடியாது. ஏனெனில் சிலர் முழக்கத்தைக் கேட்டால்தான் பணிவார்கள். அந்தச் சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ள வேண்டும்.

கருத்து வேறுபாடு இருந்தாலும் பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவதுதான் தமிழ்ப் பண்பாடு.

தீ நாற்றம் நறு நாற்றத்தை விட விரைவாகப் பரவுகிறது. கெட்ட வம்புப் பேச்சு உண்மையை விட வேகமாகப் பரவுகிறது.

கோயில் என்றால் ஸ்ரீரங்கம் என்று வைதீகர் நினைத்துக் கொள்வது போல், ஆளும் கட்சி என்றால் இருபதாண்டு காலமாக காங்கிரஸ் கட்சியையே நினைத்து வந்தோம். ஆனால் மக்கள் இன்றைய தினம் எல்லாக் கட்சிகளையும் ஆளும் கட்சியாக்கியிருக்கிறார்கள். கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியை—ஒரிசாவில் சுதந்திரக் கட்சியை—பீகாரில் பி. சோ. கட்சியை—தமிழ்நாட்டில் தி. மு. கழகத்தை ஆளும் கட்சிகளாக்கி இருக்கிறார்கள்.

❋

மாவட்டக் கழகங்கள் சரியாக இயங்கவில்லை என்று கருதி தாலுகா போர்டுகளை அமைத்தார்கள். அவை போதாதென்று ஊராட்சி ஒன்றிப்புக்கள் அமைக்கப்பட்டன. இவற்றால் கிராமங்கள் எந்த அளவுக்கு எந்த வகையில் பலன் அடைந்திருக்கின்றன என்பதை ஆராய்ந்து இன்னும் அதிக அதிகாரங்கள் தரும் வகையில் சட்டங்கள் திருத்தி அமைக்கப்படும்.

❋

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை—அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன், மதகுரு—பக்தன், மிராசு—உழவன், பிரபு—பணியாள், முதலாளி—தொழிலாளி, இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே உலக வரலாறாகும்.

❋

சமுதாயக் கொடுமைகள் ஒரு புறமும் சாதிப் பூசல்கள் ஒரு புறமும், வைதீகம் ஒரு புறமும் வீணர்

வாய் வேதாந்தம் வேரூன்றிப் புறமும் இருந்து கொண்டிருப்பதால்தான் இந்த நாட்டில் வீரர்கள் கோழைகளாகின்றனர். மக்கள் வாழ்வு வழுக்கு நிலமாகிறது.

ஏழை என்றும் பணக்காரன் என்றும் இருவர்க்கம் இருப்பது பொதுவாகவே சமுகத்துக்குக் கேடு, ஆபத்து என்று எடுத்துக் கூறி, பாட்டாளியின் துயரைத் துடைக்கப் பாடுபட்டார்கள் சமதர்ம நோக்குடைய தலைவர்கள். அந்த அரும்பணியின் ஆரம்ப வேலை, தொழிலாளரின் உழைப்பு, காலம், அளவு, கட்டு திட்டம் இன்றி முதலாளிகளால் சூறையாடப்படுவது தடுக்கப்படவேண்டும் என்று துவக்கப்பட்ட முதல் முயற்சி மே தினம்.

இன்பம் இல்லாத இல்லம் ஒரு இருண்ட வீடு அதனால் இடரும் இன்னலும் அதிகரிக்கின்றன. இழிவும் பழியும் மலிந்து கிடக்கின்றன. தந்தி தளர்ந்த வீணையிலிருந்து இனிய நாதம் எங்ஙனம் கிளம்ப முடியும்?

ஒற்றுமை—கூட்டுறவு—ஒப்பந்தம்—கூடி வாழ்தல்—நட்பு—அன்பு என்றுள்ள எத்தனையோ பதங்களும் ஒவ்வோர் அளவு வரை மட்டுமே செல்லக் கூடியவை. முழுத் திருப்தி தருபவை அல்ல—தோழமை என்ற நிலையை அடையும் படிக்கட்டுகள் இவை—ஆனால், தோழமை இவ்வளவுக்கும் மேலான

ஓர் நிலை; பேதம் நீக்கிய நிலை அல்ல—பேதம் ஏற படாத நிலை! ஏற்பட முடியாத நிலை.

❊

வெற்றி பெற்றதொன்றே போதும் சிலரை விரோதிகளாக்க. கீர்த்திக் கணவாயில் நுழையும் போது, காதகர்கள் காரணமின்றிப் பாறையை உருட்டி விடுவர் மேலிருந்து' கடலிலே அலை இருப்பது போல் சமூகத்திலே நயவஞ்சகருமுண்டு.

❊

மல்லிகைத் தோட்டதிலே மணம் வீசினாலும் புதரில் மறைந்திருக்கும் பாம்பின் குணம் மாறாதே!

❊

விழியிலே பழுதிருப்பது வேறு; விழிகளே இல்லா திருப்பது வேறு. ஆனால் விழிகளிலே பழுதிருப்பவர் களுக்கு விழிகளே இல்லாத கூட்டம் பாதை காட்டப் பாடுபடுவது இந்த நாட்டு விசித்திரங்களில் ஒன்று.

❊

காங்கிரஸ் கட்சிக்காரர்களுக்கு மக்களைப் பார்த் தால் ஓட்டர் என்ற நினைவுதான் முதலில் வரும். எங் களுக்கு மனிதர் என்ற நினைப்பு முதலிலும் பிறகு 'ஓட்டர்' என்ற நினைவும் வரும்.

❊

சிதையும் வாழ்வைச் செம்மைப் படுத்துவது முத லாளித்வ முறையல்ல. ஆகையால் தான் முதலாளித்வ

முறையுள்ள இடங்களிலே பண்டங்களின் தேக்க மிருந்தும் பட்டினி ஒரு புறமிருக்கின்றது.

உலகிலே மிகமிகச் சிறு தொகையினர்—பேரறி ஞர்கள்—சீர் திருத்தக் கருத்தினர்—உலகைத் திருத்தும் உத்தமர்கள், சிந்தையைச் சிறையிட மறுத்தனர். சிந்திக்கத் தொடங்கினர். புத்தம் புதிய உண்மைகளைக் கண்டறிந்து கூறினர். உலகின் உருவம், இயல்பு, எண் ணம், ஏற்பாடு எல்லாம் மாற ஆரம்பித்தன. தட்டை உலகு, உருண்டை ஆயிற்று.

வீணை உயர்தரமானதுதான்; வித்துவானும் தேர்ந்தவர்தான். ஆனால் ஒரு நரம்பு மட்டும் ஓரிடத்தில் தளர்ந்து இருக்கிறது என்றால், வீணையின் நாதமும் கெடும்; வித்துவானின் இசையும் பாழ்படும். ஸ்தாப னத்தின் ஐக்கியம் சங்கீதத்துக்கு உள்ள சுருதிமானத் தைப் போன்றது—மிகமிக ஜாக்ரதையாகக் கவனிக் கப்பட வேண்டிய விஷயம்.

உலகில் புகழ் வேண்டாம் என்று கூறுபவர்கள் மூன்றுவகைப்படுவர். ஒன்று—புகழ் தமக்கு வராது என்று தெரிந்து கொண்டிருப்பவர்கள்; இரண்டு, தேவைக்கு மேல் புகழைச் சேர்த்திருப்பவர்கள்; மூன்று—புகழின் பயனை அறியாதவர்கள்.

ஒரே செடியில் பூத்தாலும் மலர்கள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும். ஒரே மரத்தில் காய்த்தாலும் கனிகள் அளவில் பெரியதும் சிறியதுமாகத்தான் இருக்கும். ஒரே பழத்தில் கூட ஒரு பக்கம் புளிப்பும் மறுபக்கம் இனிப்பும் இருப்பதுண்டு. சமத்துவம் என்பது ஒரே தன்மையுடன் இருப்பதல்ல!

❋

இந்த உலகிலே நாம் காணுகின்ற பேருண்மைகளில் ஒன்று—இங்கே ஏழையும் வாழ முடியாது; பணக்காரனும் வாழ முடியாது,

❋

பொதுவுடைமெ வாழ்வு என்ருல் என்ன என்று கேட்கிறீர்களா—அது ஒரு புத்தம் புதிய நிலை—புண்ய பாவத்தை விரட்டிய நிலை—தத்தளிப்பைத் தவிர்த்த நிலை—தாசர், நீசர் என்னும் பேச்சை ஒழித்த நிலை—ஏழ்மை வெறுமை இல்லாத நல்ல நிலை.

❋

மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக் கூடிய வளர்க்கக் கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே.

❋

கோவில் திருவிழாவிலே இனிப்புப் பண்டம் விற்பவன்—அவன் உண்மையான பக்தனுக இருந்தாலும் கூட—சாமியையோ கருட வாகனத்தையோ கவனிக்க மாட்டான். தாய்மார்கள், தங்கள் இடுப்பில் எத்தனை குழந்தைகளை வைத்திருக்கிருர்கள் என்பதைத்தான்

கணக்கிடுவான்—அதைப் போல காங்கிரஸ்காரர்களும் மக்களைவிட ஓட்டுகளைத்தான் முக்கியமாக கவனிப்பார்கள்.

❋

கடைவிதியிலே கனிவிற்பவன் அழுகிய பாகத்தை அறுத்துப் போட்டு விட்டு, மிச்ச முள்ள பாகத்தின் மதுரத்தைப் புகழ்ந்துரைத்து கிடைத்தவரையில் கிடைக்கட்டும் என்று பார்க்கிறானே அது போல ஒரு சாராரும் சாம்பிள் பழம் இனிப்புத் துண்டாகக் கொடுத்துப் புளிக்கும் பழங்களைக் கூடையிலே நிரப்பிக் கொடுத்து விடுகிறான், அது போலச் சிலரும் கலை வியாபாரம் செய்கின்றனர். கனியின் தன்மையல்ல வியாபாரத்தின் காரணம், விற்பவரின் சமர்த்து.

❋

விழா ஏதோ ஓர் நாள்: விசாரம் மற்ற நாட்களிலே என்ற நிலை ஒழிந்துபட வேண்டுமானால் அன்புடன் நீவிர் வாங்கித் தந்த ஆடை போதாது. அக மகிழ்ந்து பூட்டிய ஆபரணம் போதாது. மனையையும் மாட்டையும் காட்டி மகிழ்வது போதாது. அவரவர்க்கும் தத்தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் உரிமையை விழா பரிசாகத் தாருங்கள். அப்பொழுது தான் வாழ்க்கை ஓர் விழாவாக முடியும்.

❋

திருமணத்திற்குப் பெண் கேட்கிறோம். பெண் கொடுக்க ஒப்புக் கொண்டால், பிறகு முகூர்த்த

நேரத்தை முடிவு செய்து கொள்ளலாம். பெண் கேட்பதற்கு முன்பே முகூர்த்தம் எத்தனை மணிக்கு? நடனம் ஆடுவது யார்? பாடுவது யார்? வறுவல் என்ன, பொறியல் என்ன? என்று கேட்டால் பொருத்தம் ஆகுமா?

*

பாகவதராக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கடை நடத்தினாலும் நாடகமாடினாலும், எந்தக் காரியத்தைச் செய்தாலும் நல்லவனுக்கு, திறமை சாலிக்கு உண்மை உழைப்பாளிக்கு, அவன் எந்த வேலையைச் செய்தாலும், அதிலே அவன் குறிப்பிடத் தக்கவனாவான்—இது இயற்கை நீதி. இதை பொறாமை, கலகம் எதுவும் மாற்றாது.

*

தோட்டத்துக் கதவைத் திறந்து வைக்கின்ற நேரத்தில் தோட்டத்திலிருக்கிற மல்லிகை மணம்தான் உள்ளே வரவேண்டுமென்று தோட்டக்காரன் கதவைத் திறந்துவைக்கிறான். ஆனால் தோட்டத்துக் கதவு திறந்திருந்தால் மல்லிகை மணம் வருவதற்குப் பதில் வழியிலே போகும் கள்வனே கூட புகுந்து விடுகிறான்.

*

கண்ணுக்கு அழகாக ரோஜா இருக்கிறது. அதன் மீது நமக்குப் பிரியம் இருக்கிறது. அதற்காக

வேண்டி, அதனை எடுத்து வைத்துக்கொண்டு, அழகு பார்க்கலாம். அதன் வாசனையை அனுபவிக்கலாம். ஆனால் ஆசை காரணமாக அதைக் கசக்கிப் பிழிந்து விட்டால் எந்த ரோஜா மீது நமக்கு ஆசை பிறந்ததோ, அது ரோஜாவாக இராதே—கூழாகித்தானே போய் விடும்.

கரும்புத் தோட்டத்திலே இருக்கிற கரும்பை எல்லாம் ஒரே அடியாக எடுத்துக் கசக்கி உள்ளங் கையில் சாற்றை ஊற்றி சூரிய வெளிச்சத்தில் காட்டி இதோ கற்கண்டு என்று கூறினால் விலை போகாது.

தொடர்பு என்பது நீக்கப்பட முடியாதது. இருந்து தீரவேண்டியது செம்மைப் படுத்தப்பட வேண்டியது என்றுதான் பொருள் தரும். இல்லை யென்றால் இருவர் தொடர்பு என்பது ஏதோ ஒரு வருடைய சொத்தாக மாறிவிடும்.

உயிர்வாழ உபயோகமாகும் தண்ணீர் உயிரையே குடித்துவிடுகிறது. குளத்தில் விழுந்து இறக்கும் போது! வாழ அவசியமாக இருக்கிற நெருப்பே, நமது உடலைச் சாம்பலாக்குகிறது.

சமுதாயத்தில் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக உருக்கி ஊற்றப்பட்டிருக்கும் பழக்க வழக்கம் சமு

கத்தை ஒரு சறுக்கு மரமாக்கிவிட்டது. அதில் தம் இஷ்டப்படி செல்ல விரும்பி சறுக்கி விழுந்து சாய்ந் தவர் கோடி, கோடி.

❊

மாலைக்கு மலர் தேவை. மலருக்குத் தோட்ட வளம் தேவை. அதுபோலவேதான் அரசுக்கு அழகு தர மக்களின் ஒழுக்கம் தேவை. மக்கள் ஒழுக்க முள்ளவர்களாக வாழவோ சமதர்ம முறையில் அமைந்த வாழ்க்கைப் பாதை தேவை.

❊

மக்களாட்சி முறை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கும் இந்த நாளில், உறுதி படைத்த, உணர்ச்சி மிக்க விடுதலை வீரர்கள், அவ்வப்போது, பதம் பார்த்துப் பார்த்து, முறைகளைப் புதிது புதிதாகக் கூடச் சமைத்துக் கொள்கின்றனர்.

❊

காலம் மாறக்கூடியது; மாறிக்கொண்டுதான் இருக்கும்; காலத்திற்கேற்பக் கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

❊

எவ்வளவு பணிவுடன் குறை கூறிக்கொள்பவ ரிடமும் ஆள்காட்டி விரலை அதிகாரக் கோலாக்கி அகம்

பாவத்துடன் நடந்துகொள்வது ஜார்களின் மார்க்கம்—ஜனநாயக மார்க்கமல்ல அது. ஹிட்லரின் பாதை—மனிதப் பண்பு படைத்தவர்களின் பாதையல்ல.

✻

அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற முன் வருபவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்கிறது. மதிப்பளிப்பதில்லை. மாச்சரியத்தை வாரி வீசுகின்றது துணை புரிவதில்லை. தொல்லை தருகிறது. எனினும் அந்த ஒரு சிலரால்தான் நாடு முன்னேறுகிறது.

✻

இன்னது இன்ன பலனுள்ளது என்று அறிந்து ஆராயு முன்னம், யாரும் எதனையும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆராய்ச்சி அவசியமல்ல என்று இரு சாரார் மட்டுமே கூறுவர். ஒரு சாரார் ஆராய்ச்சி செய்யும் ஆற்றலற்றவர். மற்றொரு சாரார் ஆராய்ச்சி தம் அகவாழ்வுக்கு ஊறு உண்டாக்கும் என்று பயப்படும் சுயநலமிகள். முன்னவர்கள் வேட்டையாடப்படும் முயல் கூட்டம். பின்னவர்கள் இரத்தம் குடிக்கும் நரிக் கூட்டம்; இரு சாராரும் சமுதாயத்தின் விரோதிகளே.

✻

கருகிவிட இருந்த அரும்பு மலர்ந்ததுபோல—மங்கிவிட்ட கண்கள் மீண்டும் ஒளிபெறத் தொடங்

கியதுபோல—தேய்ந்த நிலவு திடீரென முழுமதி யானதுபோல ஒரு நாட்டின் வரலாற்றிலே ஏற்படு கின்ற உன்னதமான சம்பவம்—சுதந்திரம்.

❋

ஓராயிரம் ஆபத்துக்கள் ஓயாமல் நம்மை நோக்கி வருவதாயினும் சரியே, நம் உள்ளம் உண்மையென்று உணர்ந்ததை உரைக்க அஞ்சுபவன் கோழை. கோழை மட்டுமல்ல. நாட்டுத் துரோகி.

❋

வாய்க்கால் அழகாக இருந்தால்தான் நீர் அதிக மாக ஓடும். நீர் அதிகம் ஓடினுல்தான் செந்நெல் மணி கிடைக்கும். செந்நெல் கிடைத்தால்தான் நிரம்பச் சாப்பிடலாம். நிரம்பச் சாப்பிட்டால்தான் ஆழமாக வாய்க்கால் வெட்ட முடியும். வாய்க்கால் ஆழமாக இருந்தால்தான் நீர் அதிகமாக ஓடும். இப்படி ஒரு கோர்வையான வட்டத்தில் பொருளாதார அமைப்பு இருக்கிறது.

❋

தொழிற்சங்க வரலாறு மிகவும் முக்கியமான தாகும். தமிழகத்தில் உலகிற்கே பாடமாக அமையக் கூடிய பல அரிய தொழிற்சங்கப் போராட்டங்கள் நடந்துள்ளன.

❋

தன்னிடத்தில் படித்த மாணவர்கள் உயருவதிலே தான் ஆசிரியர் தொழிலின் சிறப்பு மேலிடுகிறது. ஆசிரியர்கள் பணி கைமாறு கருதாத தியாகப் பணியாகும்.

✺

சிறுத்தை, மானின் கண்கள் எவ்வளவு மனோகரமாக இருக்கின்றன என்று எண்ணி விட்டு விடுகிறதா? பஞ்சவர்ணக் கிளியுடன் பூனை கொஞ்சுகிறதா?

✺

காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றிய காலம், கட்டிப்போட்டு வீட்டுக்குத் தீயிட்ட காலம், கிணற்றில் தள்ளி கல்லிட்ட காலம், கண்களைத் தோண்டி எடுத்த காலம், நாவைத் துண்டித்த காலம், கழுவிலேற்றிய காலம், தலையைக் கொய்த காலம், தணலில் தள்ளிய காலம், இவையெல்லாம் இருந்தன. சீர்திருத்தங்கள் பேசியோர் இவைகளிலேதான் உழன்றனர்.

✺

தி. மு. கழகம் என்ற மோரைக் கழகத் தோழர்கள் கடைந்து, ஆட்சியென்ற வெண்ணெய்யை எடுத்திருக்கிறார்கள். மோராக இருக்கும்போது இருந்த ஆபத்தை விட வெண்ணெய்யாக இருக்கும் போதுதான் ஆபத்து அதிகம். ஆட்சியென்ற வெண்ணெய்

யைப் பூனைகள் திருடிச் சென்று விடாமல்—தட்டிப் பறித்து விடாமல் காத்து நிற்பது தி. மு கழகத் தோழர்களின் கடமையாகும்.

❋

மது சாப்பிட்டால் நோய் போய்விடும் என்றெல்லாம் பேசுவது மது விலக்கை எடுக்க வேண்டும் என்ற புது வியாதி பரவி இருப்பதையே காட்டுகிறது, மது விலக்கை எப்படியாவது நீக்கி விட வேண்டும் என்ற வியாதி காரணமாகத்தான இது போன்ற விவாதங்கள் எழுகின்றன.

❋

இராணுவத்திலே, அரசியலிலே வளர்ந்த இதர நாடுகளின் வரிசையில் நாம் இல்லாதிருக்கலாம். ஆனால் தொழில்களுக்குத் தேவையான அறிவிலோ ஆற்றலிலோ நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல.

❋

நமது தமிழ் நாட்டில் கனிவளம் குறைவு என்று கூறியிருக்கிறார் மத்திய திட்ட அமைச்சர் அசோக் மேதா. அவரது கூற்றை நான் ஏற்கமாட்டேன். சேலத்து இரும்பும் பாக்சைடும் திருச்சியின் ஜிபசமும் ஒரு நூற்றாண்டுக் காலத்துக்கு மேலும் வருமே! நம்மிடம் இன்னும் தோண்டி எடுக்கப்படாத கனி வளம் ஏராளமாக உள்ளது. அரசியலில் நிதானமும் நிலையான நிர்வாக அமைப்பும் கொண்ட பகுதி இது.

நம்மைக் காட்டிலும் ஆற்றல் மிகுந்த ஏதேனும் ஒரு சக்தி குறுக்கே வந்தாலொழிய நாம் சிறந்த வெற்றி களைச் சாதிப்போம் என்பது உறுதி.

✵

வடக்கே துர்காபூர் என்றும் ரூர்கேலா என்றும் இட்டமிடுமுன் தென்னகத்தில் உள்ள நமது தொழில் களை மத்திய அரசினர் வந்து பார்க்கபடும். நாட்டினரி டையே நிலவுகின்ற வறுமையும் அறியாமையும் அழுக்கும் வேலையின்மையும் அகற்றப்பட இன்னும் பல தொழிற் கூடங்கள் அமைய வேண்டும்.

✵

தமிழ் நம் ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து விட்ட மொழி! நாம் தான் அதை மறந்திருந்தோமே தவிர, தமிழ் நம்மை மறக்கவில்லை.

✵

கதரைப் பற்றி மனம் விட்டுச் சொல்வதானல், அது ஒரு அரசியல் பிரமை என்பதோடு, பொருளா தார ரீதியில் அசாத்யமானதாகவும் உள்ளது. எனினும் கண்ணியம் கருதி கதருக்கான உதவியைத் தொடர்ந்து கொடுத்து வருகிறோம்.

✵

வேலை வாய்ப்புகளை அதிகப் படுத்துவது என்பது வேறு. தேவையான வேலைக்கு ஆட்களை அமர்த்துவது என்பது வேறு. உதாரணமாக மின்சார விசிறியை நீக்கி விட்டால். பனை ஓலை விசிறி தயாரிக்க ஒரு கோடி பேருக்கு வேலை கிடைக்கலாம். அரிசி ஆலைகளை நீக்கி

விட்டால் கைக்குத்தல் வேலை வாய்ப்பு பலபேருக்குக் கிடைக்கும். அதோடு கைக்குத்தல் பாட்டும் கூடக் கேட்கலாம்.

✹

வேலை நீக்கம் என்பது ஒரு வேலை இருவர் செய்யும் போதுதான்! திடீரென்று ஒரு இலாகாவில் புகுந்து "எவ்வளவு பேர் வேலை செய்கிறார்கள். 60 பேரா? 30 பேர் வீட்டுக்குப் போங்கள் என்று கூறுவது துக்ளக் ராஜ்யத்தில் கூட நடக்காது.

✹

முன்பிருந்த மந்திரிகள் மீது திட்டவட்டமான ஊழல் குற்றச்சாட்டு ஏதும் சாட்டப்படவில்லை என்று நான் நினைக்கிறேன். ஊழலில்லாத வேறு விதமான ஐயப்பாடுகள் அவர்கள் மீது நமக்கு இருந்திருக்குமேயானால், அதுபற்றி உயர்மட்டக்குழு ஏதும் தேவையில்லை. மக்களே உயர்மட்டக்குழு. அவர்கள் அந்த உயர்மட்டக் குழு நிலையிலிருந்து ஏற்கனவே தீர்ப்பளித்து விட்டார்கள்.

✹

வியாபாரிகளுக்கென்று ஒழுக்க நியதிகள் இருக்க வேண்டும். வர்த்தக சங்கங்கள் போன்ற வியாபாரிகளின் அமைப்புகள் நாணயமாக வியாபாரம் செய்பவர்களையே தம் சங்கத்தில் அனுமதிக்க வேண்டும் மொத்த வியாபார சங்கங்கள் புறக்கணிக்க வேண்டும். வியாபார சமுகத்தின் மதிப்புக் கெட, திடீர் பணக்காரர்களே காரணர்.

✹

மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப் போல, அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற **வேண்டும்.**

✵

தொழிலாளர் வாழ்வில் நிம்மதி ஏற்பட்டால் தான் தொழில் நேர்த்தியாக இருக்கும். குறைபட்ட மனதோடு அவர்கள் வேலை செய்தால் தொழிலில் நேர்த்தியிருக்காது - தரம் இருக்காது - பயனும் கிடைக்காது.

✵

நமது நாட்டில் தொழில்கள் வளர, இயற்கை யோடு ஒட்டி வாழுவது குறைக்கப்பட்டிருக்கிறது. காலையில் எழுந்தவுடன் பச்சைப் பசேலென்ற காட்சி யும் பூங்காற்றும் வீசுகின்ற இயற்கையோடு ஒட்டி வாழுதலே நலன் பயக்கும் என்று உடற்கூறு நிபு ணர்கள் கூறுகின்றனர். ஆனால், நாட்டிலே இப் போது நல்ல வயல்களெல்லாம் பாங்கான கட்டிடங் களாக மாறிவிடுகின்றதைப் பார்க்கிறோம். தொழில் கள் அதிகமாகி வரும்போது புதிய நோய்களும் உண் டாவதாக மருத்துவர்கள் கூறுகின்றனர். ஆனால் இந்தக் காரணங்களால் நாம் தொழில் வளர்ச்சியை விட்டுவிட முடியாது. தொழில் வளர்ந்தால்தான் பொதுச் செல்வம் ஏற்படும். அதன் வாயிலாகத் தனிப்பட்ட மனிதன் வாழ்விலும் வளம் உண்டாகும் ஆகவே தொழில்கள் வளருவதால் உண்டாகும் கேடு களைத் திட்டமிட்டு நீக்கிடவேண்டும்.

✵

தொழிலாளரது வாழ்வானது பாழ்நிலமாக அல்லாமல் பசுமையோடு பூங்காற்று வீசும் தோட்டமாக இருக்கவேண்டும்.

❋

மாஸ்கோ நகரில் அவர்கள் அதிகமானவர்களை அனுமதிப்பதில்லை. வெளியூர்களிலிருந்து எவரேனும் மாஸ்கோ வருவதானால் அவர்கள் ஏன் வருகிறார்கள், எத்தனை நாள் தங்குவார்கள், என்பதை அறிந்துஅதற்கேற்ப அனுமதிச்சீட்டுகளை வழங்கி வருகிறார்கள். இதற்குக் காரணம் அவர்கள் வேறு கட்சி, அங்கே செல்பவர்கள் வேறு கட்சி என்பதல்ல - அதிக ஜன நெருக்கடி ஏற்பட்டால் வசதிக் குறைவு ஏற்படுமே என்பதால் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள். பஜனைக் கோயிலில் கூட்டம் அதிகரித்தால் முன் வரிசையில் உள்ளவர்களுக்கு மட்டுமே ஒழுங்காகக் கிடைக்கும். பின்னால் வரவரக் குறையும்.

❋

தேர்தல் நேரங்களில் சிலர் என்மீது கல்லெறிந்தார்கள். சிலர் மாலையும் போட்டார்கள். இரண்டையும் ஒன்றாகவே மதிக்கிறேன்.

❋

கல்விக்கூடங்கள் வளர்ந்து வருகின்றன. அவற்றுக்காக ஆண்டுக்கு ஆண்டு நிரம்பத் தொகை செலவிடப்பட்டு வருகின்றது. மாநகராட்சியில் மட்டுமல்

லாமல் மாநிலம் முழுவதும் இவ்வாறு செலவிடப் பட்டு வருகிறது. இவ்வளவு பெருந்தொகைகளை செலவிடப்படுகிற நேரத்தில் பிள்ளைகளின் பெற்ருேர் தங்கள் பிள்ளைகள் பள்ளிகளில் நல்ல வண்ணம் பயிலு கிருர்களா என்பதைப்பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும். அத்தனை கோடித் தொகைகளும் பயனுள்ள வழியில் செலவிடப்படுகிறது என்பதை உலகம் ஒப்புக்கொள்ள இது அவசியம்.

❋

ஆசிரியர்களது வாழ்வில் நிம்மதி ஏற்பட வேண்டும். சமுதாயத்தில் அவர்களுக்கு உயர்ந்த அந்தஸ்து அளிக்கப்படவேண்டும். அவர்கள் நிம்மதி யாக இருந்தால்தான் கல்வி தரமாக அமையும். கல்வி தரமாக அமைந்தால்தான் அதற்காகச் செய்யும் செலவும் பயன் தரும்.

❋

எவ்வளவு கட்டிடங்கள் கட்டினுலும், விஞ்ஞா னக்கூடங்கள் அமைத்தாலும், புதிய ரயில் பாதைகள் போட்டாலும், புதுப் பூங்காக்கள் அமைத்தாலும் கல்விச் செல்வம் இல்லாவிடில் அவை பயன்தர மாட்டா.

❋

அரியாசனத்தில் தமிழ் அமரவேண்டும். அனை வரும் பாராட்டத்தக்க அளவில் அது அமரவேண்டும். அதற்குப் பகையாக இருந்த - வளர்ச்சி அடையாமல்

எல்லாம் தெரிந்ததாக நினைத்துக்கொண்டு ஒன்றும் புரியாமல் இருந்த-இந்தி தமிழுக்குப் பக்கத்தில் அமர்ந்து அதனிடம் பால பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

✱

எல்லா மக்களுக்கும் எல்லா நலன்களும் கிடைக்க வேண்டும். அதற்கு நாம் குறள் காட்டிய வழியில் நடந்து செல்லவேண்டும்.

✱

முன்பெல்லாம் காசிக்குப்போகிறேன் திருப்பதிக்குப் போகிறேன் என்பார்கள். இப்படி இருந்த இந்த நாட்டில் வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம் அமெரிக்கா போகிறேன் - ரஷ்யா போகிறேன் என்று கூறப்படுவதைக் கேட்கிறோம். நம்நாடு எந்த அளவு முன்னேறியிருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

✱

பக்கத்து வீட்டுக்காரன் எப்படி இருக்கிறான் என்பதைக் கூடத் தெரிந்து கொள்ளாதது பழைய காலப் பழக்கம். இன்று நெடுந்தூரத்து நாடுகளானாலும் அங்கே மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதை நேரில் தெரிந்துகொள்ள விழைகிறோம். அந்த நாட்டில் என்னென்ன விந்தைகள் உள்ளன என்பதை அறிய

விரும்புகிறோம். அத்தனை ஆர்வம் உள்ளது நம்மிடம்.

❋

25 வருடங்களுக்கப்பால் — மிஞ்சிப்போனால் 50 வருடங்களுக்கப்பால் இங்கிருந்து சந்திர மண்டலத்துக்கு ஒருவர் போகிறார். அவருக்கு வழியனுப்பு விழா இங்கே நிச்சயம் நடக்கும். நாடுகள் மட்டுமல்லாமல் அண்டங்கள் ஒன்றை ஒன்று நெருங்கிவரும் காலம் இது.

❋

ரஷியா என்றாலே குனிந்தவன் நிமிர்ந்து நிற்பான் அழுது கொண்டிருப்பவன் முகத்தில் புன் முறுவல் பூக்கும் பாட்டாளி தனக்கொரு நாடு அமைந்ததாக நினைப்பான். உலகத்துக்கே புதிய செய்தியை—புதிய நடை முறையைக் கொடுத்த நாடு ரஷ்யா.

❋

திருவள்ளுவர் பிறந்த நாட்டுக்கு உரியவர்கள் நாம். அவர் வாழ்ந்த மண்ணில் வாழத்தக்கவர்கள் நாம் என்பதைப் பேச்சினால் அல்ல—செயலினால் மெய்ப்பித்துக் காட்டவேண்டும்.

—

# "அண்ணாபோல் வாழ்க"

விலை ரூ. 1-50

தயாரிப்பு ;

**K. R. நாராயணன்**

131, பிராட்வே, : : சென்னை-1.